பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்

மரம் : 39 கனி : 3 மார்ச் - 2018

சகோ. மோகன் சி. லாசரஸ்

"உன் கண்ணீரைக்
கண்டேன்;
இதோ,
நான் உன்னைக்
குணமாக்குவேன்;"

2 இராஜா. 20:5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

சுகமாக இருக்கிறீர்களா? உங்கள் வீட்டில் எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா? நீங்களும், உங்கள் குடும்பமும் இயேசு கிறிஸ்துவுக்கு ரொம்ப முக்கியம்! நீங்கள் குடும்பமாக மகிழ்ச்சியோடு இருக்கத்தான் கர்த்தர் விரும்புகிறார். அதையேதான் நாங்களும் விரும்புகிறோம். **உங்களுக்காக**, உங்கள் **குடும்பத்திற்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.**

நீங்களும் எனக்காக, நம்முடைய **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியங்களுக்காக ஜெபிக்கிறீர்கள். உங்கள் ஜெபத்தினால், கர்த்தர் நம் ஊழியத்தில் பெரிய காரியங்களைச் செய்து வருகிறார். கடந்த (2018) பிப்ரவரி மாதம் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து தேசங்களில் நடந்த ஊழியங்களை கர்த்தர் அற்புதமாக ஆசீர்வதித்தார்.

தங்கள் தேசத்திற்காக ஜெபிக்க, அனேகர் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். தங்கள் தேசத்தில் அழிவுகள் வராதபடி மிகுந்த கண்ணீரோடு ஜெபித்தார்கள். தங்கள் தேசத்தில் ஒரு எழுப்புதல் உண்டாகும்படி போராடி ஜெபித்தார்கள். கர்த்தர், தான் சொன்னபடியே, ஜெபிக்கிற மக்களை திரளாக எழும்பப் பண்ணினார். ஒவ்வொரு கூட்டத்திலும் அற்புதங்களைச் செய்தார். காரணம், உங்கள் ஜெபம்தான்! நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும், உங்கள் ஜெபத்தின் வல்லமையை என்னால் உணர முடிந்தது. இந்த ஊழியத்தின் ஆசீர்வாதத்தில், உங்களுக்கும் நிச்சயமாகப் பங்குண்டு.

இந்த (2018) **மார்ச் 5**ம் தேதிமுதல், **11**ம் **தேதிவரை**, சென்னைப் பட்டணத்தின் எழுப்புதலுக்காக, **சென்னையில்** வைத்து **7 நாட்கள் உபவாசித்து ஜெபிக்கப்** போகிறோம். எல்லா திருச்சபைகளும், எல்லா தேவ ஊழியர்களும் இணைந்து, சென்னைப் பட்டணத்தில் உள்ள 7 இடங்களில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியில் கூடி ஜெபிக்கப் போகிறோம். **சென்னையில் வசிக்கிற கர்த்தருடைய பிள்ளைகள் யாவரும், கட்டாயம் இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபிக்க வேண்டும்.** இந்த ஜெபத்திற்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு** பட்டணத்தில் நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.**

செவ்வாய் கிழமைதோறும் **திருகோணமலையில்** தேசத்திற்காக ஜெபிக்க **காலை 9:30** - மதியம் **2:00** மணிவரை சிறப்பு ஜெபம் நடைபெறுகிறது. கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

தேவனுடைய கூடாரத்தை சீக்கிரமாகக் கட்டி முடிக்க, கர்த்தர் துரிதப்படுத்துகிறார். அதன் வேலைகளை துரிதப்படுத்துகிறோம். கர்த்தர் அதன் தேவைகளைச் சந்திக்க **ஜெபியுங்கள்!**

வியாபாரம் மற்றும் தொழில் செய்கிற தேவ பிள்ளைகளுக்காக, இம்மாதம் **மார்ச் 17**ம் தேதி **(3வது சனிக்கிழமை)**, தேவனுடைய கூடாரத்தில் வைத்து, **ஆசீர்வாத உபவாச ஜெபம்** நடக்க இருக்கிறது. நீங்கள் வியாபாரம் அல்லது தொழில் செய்கிறவர்களாக இருந்தால், **குடும்பமாக வந்து இந்த ஜெபத்தில் கலந்து கொள்ளுங்கள்.**

வருகிற (2018) ஏப்ரல் 7, 8 தேதிகளில் **பாரீஸிலும்**, 14,15 தேதிகளில் **சுவிட்சர்லாந்திலும்**, 21ம் தேதி கனடா-**டொராண்டோவிலுமாக**, கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களுக்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**



உலகம் முழுவதும் இருக்கிற தமிழ் மக்கள் மத்தியில், கர்த்தர் ஒரு ஜெப எழுப்புதலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்! இந்தக் கடைசிக் கால எழுப்புதலில், தமிழ் மக்களுக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. **ஜெபித்து, அதற்காக ஆயத்தப்படுங்கள்!**

நாங்களும் உங்களுக்காக **ஜெபிக்கிறோம்!**




## எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்! 46வது பிறந்த நாள் - 2018 மார்ச் 18

1972ம் வருடம் **மார்ச் 18**ம் தேதிதான், நான் கிறிஸ்து இயேசுவுக்குள் மறுபடியும் பிறந்தேன். அன்றுதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னைச் சந்தித்து, எனக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தைக் கொடுத்த நாள். அன்றைக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்குக் கொடுத்த இரட்சிப்பின் சந்தோஷம், இந்நாள் வரை என் உள்ளத்தில் இருக்கிறது.

அந்த நாள்முதல், இந்நாள்வரை என்னைக் காத்து வருகிற அவருடைய மாறாத கிருபைக்காக, கர்த்தரை நான் துதிக்கிறேன். இம்மாதம், **வருகிற 18ம் தேதி, எனக்காக நீங்கள் விசேஷமாக ஜெபிக்க வேண்டும்** என்று, இயேசுவின் நாமத்தில் அன்பாக நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். எந்த நோக்கத்திற்காக இயேசு கிறிஸ்து என்னைச் சந்தித்தாரோ, அந்த நோக்கம் என்னில் பூரணமாய் நிறைவேற **எனக்காக கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள். நம் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.**


கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்;”

2 இராஜா. 20:5.

இதுதான், கர்த்தர் உங்களுக்குச் சொல்கிற வார்த்தை! அதாவது, “நான் உனக்கு அற்புதம் செய்வேன்! நான் உன் தேவைகளை சந்திப்பேன்! நான் உன் கண்ணீரைத் துடைப்பேன்! ஏனென்றால், உன் கண்ணீரை நான் கண்டேன்! உன் விண்ணப்பத்தை நான் கேட்டேன்!” என்று **கர்த்தர் சொல்கிறார்.**

**‘எசேக்கியா’** என்கிற ஒரு இராஜா, தன்னுடைய 25வது வயதில் முடி சூட்டப்பட்டு, எருசலேமை மையமாக வைத்து, 29 வருடங்கள் யூதேயா தேசத்தை ஆட்சி செய்து வந்தார். **(2 இராஜா. 18:2).**

இந்த எசேக்கியா இராஜா, கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதற்கு தன்னை அர்ப்பணித்து, அவருக்குப் பிரியமான அனேகக் காரியங்களைச் செய்தார்.

அவருக்கு முன் இருந்த சில இராஜாக்கள், பல விதமான விக்கிரகங்களை எல்லாம் உண்டாக்கி, தேசத்தை தீட்டுப்படுத்தி இருந்தார்கள். அது, கர்த்தருக்கு மிகவும் அருவருப்பான காரியமாக இருந்தது. ஆனால், எசேக்கியா இராஜா அவைகள் எல்லாவற்றையும் தேசத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டார். “எசேக்கியா, கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்தான்.” என்று வேதாகமம் சாட்சி கொடுக்கிறது. **(2 இராஜா. 18:3-7).**

சிலர், ஆரம்பத்தில் கொஞ்ச நாட்கள் மிக பக்தியாக கர்த்தரைப் பின்பற்றுவார்கள். நாளாக நாளாக, தங்கள் வாழ்க்கையில் எதாவது ஒரு நல்ல காரியம் நடந்து விட்டால், அல்லது எதாவது சூழ்நிலைகளின் நிமித்தமாக, “ஜெபிக்க நேரமில்லை! வேதாகமத்தை வாசிக்க நேரமில்லை! ஆலயத்திற்குப் போக நேரமில்லை!” என்று சொல்லி, கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய் விடுவார்கள்.

ஆனால் இந்த எசேக்கியா, வாலிப வயதில் ஒரு பெரிய தேசத்தின் இராஜாவாக உயர்த்தப்பட்டு இருந்தார்! அவர் கர்த்தரை விட்டுப் பின்வாங்கவில்லை. ஆகவே, கர்த்தர் எசேக்கியா இராஜாவோடு கூட இருந்து, அவர் போன இடங்களில் எல்லாம் அவருக்கு அனுகூலமாக்கினார். கர்த்தர் அவரை ஆசீர்வதித்ததினால், எசேக்கியா இராஜா செய்த காரியங்கள் எல்லாம் வாய்த்தது. **(2 இராஜா. 18:7).**

இப்படியாக, கர்த்தருக்கு மிகவும் பிரியமாக நடந்த எசேக்கியா இராஜாவுக்கு, **‘பிளவை’** என்கிற, மரணத்திற்கேதுவான ஒரு கொடிய வியாதி வந்து விட்டது! அந்த வியாதி, **‘புற்று நோய்’**, அதாவது, **‘Cancer’** என்று, ஆங்கில வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

ஒரு பெரிய தேசத்தினுடைய இராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டிருந்தபோது, எங்கெல்லாம் பிரபலமான வைத்தியர்கள் இருந்திருப்பார்களோ, அவர்களை எல்லாம் கூட்டிக் கொண்டு வந்து, பல விதமான வைத்தியங்களை செய்து பார்த்திருப்பார்கள். ஆனால், சுகம் கிடைக்கவில்லை.

ஒருவேளை அவர், “நான் கர்த்தருக்குப் பயந்துதானே நடந்தேன்? விக்கிரகங்களை எல்லாம் அப்புறப்படுத்தினேனே! கர்த்தருக்குப் பிரியமானபடிதானே நான் வாழ்கிறேன்? எனக்கு ஏன் இந்த வியாதி வந்தது?” என்றெல்லாம் யோசித்திருக்கக் கூடும். ஆனாலும், கர்த்தரை விட்டு அவர் பின்வாங்கவில்லை.

அந்த சமயத்தில் கர்த்தர், **‘ஏசாயா’** என்கிற தன்னுடைய தீர்க்கதரிசியினிடத்தில், “எசேக்கியா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வியாதிப்பட்டு படுக்கையில் இருக்கிறான். அவன் எனக்குப் பிரியமானபடிதான் வாழ்கிறான். ஆனால், இப்பொழுது அவனுடைய ஆயுட் காலம் முடிவடையப் போகிறது. நான் அவனை எடுத்துக் கொள்ளப் போகிறேன். ஆகவே, "உன் வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்து.' என்று அவனிடத்தில் போய் சொல்." என்று சொல்லச் சொன்னார்.

அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா இராஜாவினிடத்தில் போய், "**...நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்கிறார்." (2 இராஜா. 20:1)** என்று சொன்னார்.

அந்த வார்த்தையைக் கேட்ட எசேக்கியா இராஜா, "நான் என்ன தவறு செய்தேன்? கர்த்தருக்கு விரோதமாக நான் என்ன பாவம் செய்தேன்?..." என்றெல்லாம் பேசவில்லை.

ஏசாயா அந்த வார்த்தையைச் சொல்லி விட்டு, அந்த அறையில் இருந்து வெளியே போனார். அப்பொழுது, வியாதிப் படுக்கையில் படுத்திருந்த எசேக்கியா இராஜா, அந்த இடத்தில் தன்னைச் சூழ நின்றிருந்த யாரையும் பார்க்க விரும்பாமல், சுவர் பக்கமாகத் திரும்பி, கர்த்தரை நோக்கிப் பார்த்து,



**"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்." 2 இராஜா. 20:3.**

தன்னிடத்தில் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தையைக் கேட்ட எசேக்கியா இராஜா, அந்த நேரத்தில், "கர்த்தாவே, ஏன் என்னை எடுக்கப் போகிறீர்? நான் என்ன பாவம் செய்தேன்? நான் என்ன தவறு செய்தேன்? நீர் அருவருக்கிற விக்கிரகங்களை எல்லாம் நான் அப்புறப்படுத்தவில்லையா? உம்முடைய கற்பனைகளுக்கு எல்லாம் நான் கீழ்படிந்து வாழவில்லையா? நான் உமக்கு அதைச் செய்யவில்லையா? இதைச் செய்யவில்லையா?" என்று, வீணான வார்த்தைகளைச் சொல்லி அலப்பவில்லை.

சில வேளைகளில் நாம் ஜெபிக்கும்போது, அனேக வீணான வார்த்தைகளை எல்லாம் சொல்லி அலப்புகிறோம். சிலர் தேவ ஊழியக்காரர்களிடத்தில் போய், தங்கள் பிரச்சனையைச் சொல்வார்கள். 'சரி, ஜெபிக்கலாம்.' என்றால், அழுது கொண்டு, திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கொண்டிருப்பார்கள். அப்படிச் செய்கிறதினால், "ஒரு அற்புதம் நடக்கும்!" என்று நினைக்கிறார்கள். இல்லைவே இல்லை!

பாருங்கள், எசேக்கியா இராஜா எந்த விதமான வீணான வார்த்தைகளையும் சொல்லி அலப்பாதபடி, மிகச் சரியாக, சிறிய ஒரு ஜெபம் செய்தார்.

அவரைச் சுற்றிலும் யார் யாரெல்லாமோ நின்றிருந்திருக்கலாம். ஆனால், அவர்களுடைய முகத்தைப் பார்க்க அவருக்கு விருப்பம் இல்லாமல், சுவர் பக்கமாகத் திரும்பி, கர்த்தரை நோக்கிப் பார்த்து, "ஆண்டவரே, நீர்தான் எனக்கு முக்கியம். இவர்களில் யாருமே என்னைக் காப்பாற்ற முடியாது. உம்மால்தான் என்னைக் காப்பாற்ற முடியும். கர்த்தாவே, நான் உண்மையும், மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்." என்று சொல்லி, மிகவும் அழுதார்.

ஒருவேளை, "கர்த்தர் என்னை சுகமாக்கி, இந்த வியாதிப் படுக்கையை விட்டு எழுப்பி விடுவார்!" என்று நம்பிக்கை கொண்டிருந்தேனே! ஆனால், நான் சற்றும் எதிர்பாராத, ஒரு துக்கமான செய்தியைச் சொல்லி விட்டாரே!" என்று, ஏங்கி ஏங்கி அழுதிருக்கலாம்.

பாருங்கள், எசேக்கியா இராஜா ஜெபம் பண்ணி, ஒரு நிமிடம் கூட ஆகியிருக்கவில்லை. கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டார். ஏசாயா தீர்க்கதரிசி அந்த செய்தியை இராஜாவினிடத்தில் சொல்லி விட்டு, அந்த அறையை விட்டு வெளியே வந்து, இன்னும் வெளி முற்றத்தைக் கூட தாண்டவில்லை. கர்த்தர் ஏசாயாவை மறுபடியுமாகக் கூப்பிட்டு,

"நீ எசேக்கியாவினிடத்தில் திரும்பிப் போய், **'உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; நான் உன்னைக் குணமாக்குவேன்; ...உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்;..." (2 இராஜா. 20:5)** என்று சொல்." என்று சொன்னார்.

அப்பொழுது ஏசாயா மிகுந்த அதிர்ச்சி அடைந்தவராக, "என்ன ஆண்டவரே! நீ மரித்துப் போய் விடுவாய்! உன்னுடைய வீட்டுக் காரியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்து...!' என்று நீர் சொல்லச் சொன்னதினால்தானே, சில நிமிடங்களுக்கு முன்பாகப் போய் சொல்லி விட்டு வருகிறேன்! இப்பொழுது திடீரென்று, 'கர்த்தர் உன்னை குணமாக்குவார்!' என்று சொல்லச் சொல்கிறீரே!" என்று சொல்லி இருக்கக் கூடும்!

காரணம், எசேக்கியா இராஜாவினுடைய அந்தக் கண்ணீரின் ஜெபம், கர்த்தருடைய உள்ளத்தை அசைத்து விட்டது! "அவன் என்னை நோக்கிக் கூப்பிட்டு, மிகுந்த கண்ணீரோடு ஜெபிக்கிறான். அவனுடைய ஜெபத்திற்கு நான் உடனே பதில் கொடுத்தாக வேண்டும்." என்று கர்த்தர் சொன்னவுடன், ஏசாயா அப்படியே திரும்பிப் போய், கர்த்தர் தன்னிடத்தில் சொன்னபடியே, "உம்முடைய கண்ணீரைக் கர்த்தர் கண்டார்! உம்முடைய ஜெபத்தைக் கேட்டார்! கர்த்தர் உம்மைக் குணமாக்கி, உம்முடைய நாட்களோடே இன்னும் 15 வருடங்களைக் கூட்டிக் கொடுப்பதாகச் சொல்கிறார்." என்று சொல்லி விட்டார். அதுதான் கர்த்தர்!

நடந்த அந்த சம்பவத்தை நன்றாகக் கவனித்துப் பாருங்கள். ஏசாயா பெரிய தீர்க்கதரிசிதான்! கர்த்தர் அவரோடு நேரடியாகவே பேசுகிறார்! அப்பேர்ப்பட்ட பெரிய ஒரு தீர்க்கதரிசி, எசேக்கியா இராஜாவின் அரண்மனைக்கு வந்தார்.

அந்த சமயத்தில், வியாதிப்பட்டிருந்த எசேக்கியா இராஜா, ஏசாயாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "நான் பாவிதான்! நான் எதற்கும் தகுதி இல்லாதவன்தான்! நீர் பெரிய தீர்க்கதரிசி அல்லவா? எனக்காக கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுங்கள். என் ஆயுசு நாட்களை கர்த்தர் கூட்டிக் கொடுக்க வேண்டும். அதற்காக கர்த்தரிடத்தில் எனக்காகக் கெஞ்சி மன்றாடுங்கள்." என்று சொல்லி, அழுது கொண்டிருக்கவில்லை.

எனக்கு அன்பானவர்களே, உங்களுக்கு அற்புதம் நடக்க வேண்டுமா? தேவ ஊழியக்காரர்களிடத்தில் உங்கள் பாரங்களைச் சொல்லுங்கள். அது தவறல்ல. ஆனால், அவர்களுடைய கையைப் பிடித்துக் கொண்டு அழாதீர்கள். தேவ ஊழியக்காரர்களால் அற்புதங்களைச் செய்ய முடியாது. மாறாக, **கர்த்தருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அழுங்கள். அவர் உங்கள் கண்ணீரின் ஜெபத்தைக் கேட்டு, அற்புதத்தைச் செய்வார்.**

ஏசாயாவினால் தன்னுடைய வியாதிப் படுக்கையை மாற்ற முடியாது. அவரால் தனக்கு அற்புத சுகத்தைக் கொடுக்க முடியாது என்று, எசேக்கியா இராஜாவுக்கு நன்றாகவே தெரியும். ஆகவேதான் எசேக்கியா இராஜா, கர்த்தர் பக்கமாக தன் இருதயத்தைத் திருப்பினார்.

மட்டுமல்ல, "கர்த்தாவே, உமக்காக நான் அதைச் செய்தேனே! இதைச் செய்தேனே! அப்படி வாழ்ந்தேனே! இப்படி வாழ்ந்தேனே!" என்று சொல்லி, வீணான வார்த்தைகளைச் சொல்லி அலப்பவும் இல்லை. அலப்புகிறதினால் எந்த விதமான அற்புதமும் நடந்து விடாது. **கர்த்தரிடத்தில் இருந்து அற்புதங்களைப் பெறுவதற்கு,** அதிகக் கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை. **கருத்தான, எளிமையான ஒரு சிறிய ஜெபம் போதும்.** கர்த்தர் அற்புதம் செய்து விடுவார்!

> எசேக்கியா இராஜா,
> **கர்த்தர் பக்கமாக தன் இருதயத்தைத் திருப்பினார்.**

சில வருடங்களுக்கு முன்பு, இலங்கையில் உள்ள, 'செங்கலடி' என்கிற ஒரு பகுதிக்கு நான் ஊழியத்தின் நிமித்தமாகச் சென்றிருந்தபோது, அங்கு நடைபெற்ற கூட்டத்தில், கர்த்தர் பலத்த அற்புதங்களைச் செய்தார். அதில் ஒரு அற்புதமான சாட்சியை நான் கேட்டேன்.

அதாவது, ஒரு வாலிப மகள், தன் மார்பில் புற்று நோய் கட்டியோடு அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தாள். அவளைப் பரிசோதித்த டாக்டர்கள், "இனி அவ்வளவுதான்! நீ பிழைக்க முடியாது." என்று சொல்லி விட்டார்கள். அவள் தன் வீட்டிற்கு வந்து, படுக்கையில் படுத்தவளாக, அழுது கொண்டே இருந்தாள்.

இயேசு கிறிஸ்துவுக்கும், அவளுடைய குடும்பத்தினருக்கும் சம்மந்தமே கிடையாது. அவளுக்கு அந்த வியாதி அதிகமாகி அதிகமாகி, மரணத் தருவாய்க்கு உள்ளானாள். அந்த சமயத்தில் ஒரு தாயார், அந்தக் கூட்டத்தைப் பற்றி அவளிடத்தில் சொல்லி, நடக்கக் கூட பெலனில்லாமல் இருந்த அவளை மிகவும் சிரமப்பட்டு, அந்தக் கூட்டத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

தாங்க முடியாத வலியோடு, 'இனி மரணம்தான்!" என்கிற சூழ்நிலையில், அவள் அந்தக் கூட்டத்தின் பின் பகுதியில் உட்கார்ந்து பிரசங்கத்தைக் கேட்டபோது, அவளுக்குள் ஒரு விசுவாசம் வந்து விட்டது!

ஜெப வேளையில், "இயேசுவை நோக்கிக் கூப்பிடுங்கள்..." என்று நான் ஜனங்களைப் பார்த்துச் சொன்னபோது, அவளும், "இயேசுவே, என்னையும் குணமாக்கும்!" என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிட்டாள்.

"நான் அப்படி இருந்தேன்! இப்படி இருந்தேன்!" என்றெல்லாம் எதுவும் பேசாமல், 'இயேசு' என்கிற நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டாள். கர்த்தர் அவளுடைய அந்த ஜெபத்தைக் கேட்டு, அந்த இடத்திலேயே புற்று நோய் கட்டியைச் சுகமாக்கி, ஒரு அற்புதமான சுகத்தை அவளுக்குக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்துவிடம் இருந்து அற்புதத்தைப் பெறுவது, கஷ்டமே கிடையாது. மிகவும் சுலபம்! எளிமையான விசுவாசத்தோடு கூட, கருத்தான ஒரு சிறிய ஜெபம் செய்தால் போதும். அவ்வளவுதான்! உங்களுடைய தேவைக்காக கர்த்தரிடத்தில் போய், தேவையில்லாத வீணான வார்த்தைகளை எல்லாம் சொல்லி, அலட்ட வேண்டிய அவசியமே இல்லை.

ஒரு சிறிய குழந்தை, தன் தாயினிடத்தில் போய், "எனக்குப் பசிக்கிறதம்மா..." என்று சொல்லி விட்டால், அந்தப் பிள்ளையின் பசியை ஆற்றுகிற வரைக்கும் அந்தத் தாய்க்கு நிம்மதி இருக்காது. வேக வேகமாக அந்தப் பிள்ளையைப் பசியாற்றுவதில் தான் அந்தத் தாயின் கவனம் இருக்கும்.

பொல்லாதவர்களாகிய நமக்கே இவ்வளவு அன்பு இருந்தால், சிலுவையில் நமக்காக தன் உயிரையே கொடுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு, அவருடைய பிள்ளைகளாகிய நம் மீது எவ்வளவு அன்பு இருக்கும்! அவர் நம் மீது அவ்வளவு அன்பு வைத்திருக்கிற தேவன்! நம் ஒவ்வொருவருக்காகவும் தன் உயிரையே கொடுத்த தேவன் இயேசு கிறிஸ்து!

அப்படிப்பட்ட ஒரு நல்ல தகப்பனாக இருக்கிற நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பார்த்து, "தகப்பனே, என் வேதனை உமக்குத் தெரியவில்லையா? எனக்கு இது இல்லையே! அது இல்லையே!" என்று சொல்லத் தேவையில்லை.

மாறாக, "இயேசுவே, உம்மை நோக்கி நான் வந்திருக்கிறேன். எனக்கு நீர் ஒரு அற்புதம் செய்ய வேண்டும்." என்று, ஒரு சிறிய ஜெபம் பண்ணினாலே போதும். கர்த்தர் அற்புதம் செய்து விடுவார்.

# உண்மை உள்ளவர்களாக இருங்கள்!

**"...கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று (எசேக்கியா) விண்ணப்பம்பண்ணினான்." 2 இராஜா. 20:3.**

எசேக்கியா இராஜா, "எனக்கு ஏன் இப்படிச் செய்தீர்? எனக்கு ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது? எனக்கு ஏன் இப்படி நடக்க வேண்டும்?" என்று சொல்லி, கர்த்தரிடத்தில் அலப்பவில்லை. சுலபமாகச் சொன்னார்.

அதாவது, "உமக்கு முன்பாக நான் உண்மையாக நடந்தேனே ஆண்டவரே!" என்று சொல்லி, அதை ஞாபகப்படுத்தினார், அவ்வளவுதான்!

முதலாவது, நாம் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும். காரணம், யார் உண்மை உள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் கர்த்தர் அற்புதம் செய்வார்.

**"என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்." எண். 12:7.**

'மோசே' என்கிற தன்னுடைய ஊழியக்காரனைக் குறித்து கர்த்தர் சொல்லும்போது, "என் தாசனாகிய மோசேயைப் பற்றி யாரும் பேசாதிருங்கள்." என்று சொல்லி, கர்த்தர் அவருக்காக வழக்காடினார்.

மட்டுமல்ல, "என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் உண்மை உள்ளவன்! மோசேயைப் பற்றி எனக்குத் தெரியும்! நீங்கள் நினைக்கிற மாதிரி அவன் கிடையாது! நான் என்ன சொல்வேனோ, அதை அப்படியே நிறைவேற்றி முடிப்பதில், மிகவும் கவனமாக இருக்கிறவன்! ஏமாற்றாதவன்!

அதனால்தான் தரிசனத்தின் மூலமாகவோ, அல்லது சொப்பனத்தின் மூலமாகவோ அல்ல. ஒரு மனிதன், தன் சினேகிதனோடு பேசுவதைப் போல, அவனோடு கூட நான் முகமுகமாகப் பேசுகிறேன். காரணம், அவன் உண்மை உள்ளவன்!" என்று, கர்த்தர் மோசேயைக் குறித்து சாட்சி கொடுத்தார்.

> உங்களைக் குறித்து
> ## கர்த்தர் என்ன சாட்சி கொடுக்க முடியும்?

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு உங்களைக் குறித்து கர்த்தர் என்ன சாட்சி கொடுக்க முடியும்? "தினமும் ஜெபம் பண்ணுவேன்." என்று ஒப்புக் கொடுத்தீர்களே, அதில் உண்மையாக இருக்கிறீர்களா?

"தினமும் வேதாகமத்தை வாசிப்பேன்." என்று கர்த்தரிடத்தில் அர்ப்பணித்தீர்களே, அதில் உண்மையாக இருக்கிறீர்களா?

கர்த்தருக்கு அடுத்த காரியத்தில் நீங்கள் உண்மையாக இருக்கிறீர்களா? உங்கள் உபவாசத்தில், ஆவிக்குரிய காரியத்தில், கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த பொறுப்பில் உண்மையாக இருக்கிறீர்களா?

கர்த்தருக்கு முன்பாகப் போய் நின்று, "நான் உண்மையாக இருக்கிறேன்...!" என்று, தைரியமாக உங்களால் சொல்ல முடியுமா?

**"...அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை." (தானியேல் 6:4)** என்று, தானியேலைக் குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. மட்டுமல்ல, **"நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்கவந்தேன்;..." (தானியேல் 9:23)** என்று, ஒரு தேவ தூதன் வந்து தானியேலினிடத்தில் சொன்னான்.



தானியேல் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பில், தன் வேலையில், உண்மை உள்ளவராக இருந்தார். கர்த்தரையோ, மற்ற மனிதர்களையோ கூட அவர் ஏமாற்றவில்லை! தன்னிடத்தில் பொறுப்பைக் கொடுத்த இராஜாவை ஏமாற்றவில்லை! மிகவும் உண்மை உள்ளவராக இருந்தார்!

அப்படிப்பட்ட உண்மை உள்ள தானியேல் ஜெபித்தபோது, தேவ தூதன் பிரத்தியட்சமாக அவருக்கு முன்பாக வந்து நின்றான். தானியேல் வேண்டிக் கொள்ள தொடங்கியவுடனே, பரலோகத்தில் இருந்து கர்த்தர் அவருக்குக் கட்டளை கொடுத்து விட்டார்!

இன்றைக்கு நம்மைக் குறித்து யோசித்துப் பாருங்கள். உங்கள் வீட்டிற்குள் நீங்கள் உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? கணவன்-மனைவிக்குள் உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? பெற்றோராகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் பிள்ளைகளாக இருந்தால், உங்கள் பெற்றோருக்கு உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா?

நீங்கள் உண்மை இல்லாதவர்களாக இருந்தால், கர்த்தர் உங்களுக்கு எப்படி அற்புதம் செய்ய முடியும்? உங்கள் மனைவியை ஏமாற்றி, அல்லது உங்கள் கணவரை ஏமாற்றி, நீங்கள் ஒரு உண்மையற்ற வாழ்க்கை வாழ்ந்தால், கர்த்தர் உங்கள் ஜெபத்திற்கு எப்படி பதில் கொடுக்க முடியும்?

இன்றைக்கு, "என்னுடைய வேலையில் நான் உண்மை உள்ளவனா(ளா)க இருக்கிறேன். எனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பில் நான் உண்மை உள்ளவனா(ளா)க இருக்கிறேன்!" என்று உங்களால் சொல்ல முடியுமா? நாம் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதைப் பார்த்துத்தான் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

அனேக வருடங்களுக்கு முன்பாக நடந்த ஒரு சம்பவத்தை, சகோ. D.G.S. தினகரன் அவர்கள், தன்னுடைய ஒரு பிரசங்கத்தில் இப்படியாகக் குறிப்பிட்டார்கள். **ஒரு கிராமத்தில் உள்ள ஒரு ஆலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பிரசங்கம் செய்வதற்காக ஒரு தேவ ஊழியக்காரர் அழைக்கப்பட்டிருந்தார். 3 நாட்களும் கர்த்தருடைய வார்த்தையை மிகுந்த வல்லமையாகப் பிரசங்கம் பண்ணினார். திரளான ஜனங்கள் கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்படிந்து, தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். கூட்டம் முடிந்த மறுநாள் காலையில், அந்த ஊழியக்காரர் பேருந்தில் ஏறி தன் ஊருக்குப் புறப்பட்டார்.**

**நடத்துனரிடத்தில் பணம் கொடுத்து, பயணச் சீட்டை வாங்கிக் கொண்டார். அந்த நடத்துனர், மீதிச் சில்லறையை அவருக்குக் கொடுக்கும்போது, வேண்டுமென்றே ஒரு ரூபாயை அதிகமாகக் கொடுத்து விட்டார். அப்பொழுது அந்த தேவ ஊழியக்காரர், "நாம் ஏமாற்றி அவருடைய பையில் இருந்து எடுக்கவில்லை. அவராகவே தந்திருக்கிறார். அதை நாமே வைத்துக் கொள்ளலாமே! இதில் என்ன தவறு இருக்கிறது?" என்று, தன் மனதில் நினைத்தார்.**

**அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் அவரிடத்தில் இடைப்பட்டு, "மகனே, அந்த ஒரு ரூபாய் உன்னுடையதல்ல. அதைத் திருப்பிக் கொடுத்து விடு." என்றார். உடனே அவர் கீழ்படிந்து, நடத்துனரை அழைத்து, "ஐயா, நீங்கள் கொடுத்த மீதிச் சில்லறையில் ஒரு ரூபாய் அதிகமாக இருக்கிறது. அதை வாங்கிக் கொள்ளுங்கள்." என்று சொல்லி, கொடுத்து விட்டார்.**

**அப்பொழுது அந்த நடத்துனர் அவரைப் பார்த்து, "நீங்கள் ஒரு உண்மையான தேவ ஊழியக்காரர்தான் என்று, இப்பொழுது நான் நம்புகிறேன்!" என்று சொன்னார்.**

**அந்த ஊழியக்காரருக்கு ஒரே ஆச்சரியம்! "என்ன இவர் இப்படிச் சொல்கிறார்!" என்று எண்ணி, அவரைப் பார்த்தபோது, "என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? நீங்கள் 3 நாட்களாக பிரசங்கம் பண்ணினீர்கள் அல்லவா? எனக்கு அந்த ஊர்தான். அந்த 3 நாட்களும் நான் உங்களுடைய கூட்டத்தில் பங்கு பெற்றேன். நீங்கள் உண்மையான ஊழியக்காரர்தானா? அல்லது ஏமாற்றுக்காரரா? என்று சோதித்துப் பார்க்கத்தான், ஒரு ரூபாயை அதிகமாக நான் உங்கள் கையில் கொடுத்தேன்.**

**நீங்கள் அந்தக் காசை என்னிடத்தில் திருப்பிக் கொடுத்தவுடன், நீங்கள் உண்மையான**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேவ ஊழியக்காரர்தான் என்பதை நான் அறிந்து கொண்டேன்." என்று சொன்னார்.

எனக்கு அன்பானவர்களே, கர்த்தரும் கூட நம்மையும் அப்படித்தான் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவருடைய பார்வைக்கு ஒருவரும் தப்ப முடியாது. நம்முடைய உண்மைத்துவத்தை கர்த்தர் சோதித்துப் பார்க்கிறார். நாம் உண்மை உள்ளவர்களாக இருந்தால், தைரியமாக கர்த்தருடைய சமூகத்தில் நின்று ஜெபிக்கலாம்.



"...உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்." மத்தேயு 25:21.

தேவ ஊழியக்காரர்களில் இரண்டு விதமான ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். ஒன்று, உண்மையும், உத்தமமுமாக ஊழியம் செய்கிறவர்கள்! இன்னொன்று, சோம்பலான ஊழியக்காரர்கள்! "அவர்கள் பொல்லாத ஊழியர்கள்." என்று இயேசு கிறிஸ்துவே சொல்கிறார். **(மத்தேயு 25ம் அதிகாரம்).**

கர்த்தர் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டே இருக்கிறார். உண்மை உள்ளவர்களைத்தான் அவர் ஆசீர்வதிப்பார்! அதே சமயத்தில், ஏமாற்றுகிறவர்கள் கொஞ்ச நாட்களில் காணாமலே போய் விடுவார்கள்.

இன்றைக்கு, "நாம் உண்மை உள்ளவர்களாக இருக்கிறோமா? அல்லது ஏமாற்றுகிறவர்களாக இருக்கிறோமா?" என்று, நம்மை நாமே சற்று சிந்தித்துப் பார்ப்போம். நாம் ஒவ்வொரு காரியத்திலும் மிகவும் கவனமாக, உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு சமயம், நம்முடைய ஊழியக் கட்டிடத்திற்காக, 'கிரானைட் கல்' ஆர்டர் செய்திருந்தோம். ஒருநாள் அந்தக் கடை வழியாக நான் போக வேண்டியதிருந்ததால், அவர்களுடைய அழைப்பை ஏற்று, நான் அந்தக் கடைக்குச் சென்று, அங்கிருந்த உரிமையாளர் ஒருவரிடத்தில் பேசிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது நான் அவரிடத்தில், "நாங்கள் ஊழியம் செய்கிறோம். நீங்கள் நஷ்டத்திற்குக் கொடுக்க வேண்டாம். லாபத்தைக் கொஞ்சம் குறைத்து ஊழியத்திற்கு உதவி செய்யுங்கள்." என்று கேட்டுக் கொண்டேன். அப்பொழுது எங்களோடு வந்திருந்த பொறியாளர் என்னிடத்தில் வந்து, "பிரதர், நமக்கு குறைத்துத் தருகிறார்கள். அதனால் நமக்கு ₹ 3 லட்சம் மிச்சம்!" என்று சொன்னார்.

உடனே நான், "அப்படியா? மிகவும் சந்தோஷம்! ₹3 லட்சம் தள்ளுபடி செய்து கொடுத்தால் நல்லதுதானே!" என்று சொன்னேன். அதற்கு அவர், "ஆனால், நாம் ஒன்று செய்ய வேண்டும். அதாவது, நாம் எவ்வளவு பணத்திற்கு கிரானைட் கல் வாங்குகிறோமோ, அதில் பாதிப் பணத்திற்குத்தான் 'பில்' தருவார்களாம்!" என்று சொன்னார்.

எனக்குப் புரியவில்லை! நான், "எதற்கு அப்படிச் செய்கிறார்கள்? 'ஊழியத்திற்கு...' என்று, ₹3 லட்சம் குறைத்துக் கொடுக்கிறார்கள்!' என்கிறீர்கள். அப்படியானால், கொடுக்கிற பணத்திற்கு உரிய 'பில்'லை அவர்கள் கொடுக்க வேண்டியதுதானே!" என்றேன்.

அதற்கு அவர், "அந்த மொத்தப் பணத்திற்கும் 'பில்' போட்டால், அரசாங்கத்திற்கு வரி கட்ட வேண்டும். குறைத்து 'பில்' போட்டு, அந்த ₹3 லட்சத்தையும் மிச்சம் பிடித்து, அதை நமக்குத் தருகிறார்களாம்!" என்று சொன்னார். அதற்கு நான், "அப்படியானால், அந்த ₹3 லட்சம் யாருக்குப் போய் சேர வேண்டிய பணம்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "அது அரசாங்கத்திற்குப் போய் சேர வேண்டிய பணம்." என்றார்.

உடனே நான், "அரசாங்கத்தை ஏமாற்றுவது, கர்த்தரை ஏமாற்றுவதற்குச் சமம். அரசாங்கம் கர்த்தருடையது. ஒரு அரசாங்கத்திற்குப் போக வேண்டிய வரிப் பணத்தை ஏமாற்றினால், நான் கர்த்தரை ஏமாற்றுவதாக அர்த்தம். ஆகவே, அதை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாது. நான் கொடுக்கிற பணத்திற்கு அப்படியே 'பில்' கொடுக்க வேண்டும். நான் அரசாங்கத்தை ஏமாற்ற ஆயத்தமாக இல்லை.

என் கர்த்தர் அப்படிப்பட்ட காரியங்களை எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. நானே ஒரு ஏமாற்றுக்காரனாக இருந்தால், என்னால் எப்படி ஜனங்களுக்கு வேத வசனங்களைப் போதிக்க முடியும்? கர்த்தர் எப்படி அதை அங்கீகரிப்பார்? பணத்திற்காக நான் கர்த்தரை ஏமாற்ற முடியாது. அவர்கள், தங்கள் லாபத்தில் கொஞ்சம் குறைத்துக் கொடுத்தால் பரவாயில்லை.

அரசாங்கத்தை ஏமாற்றி, 'உங்களுக்குக் குறைத்துத் தருகிறேன்.' என்று சொன்னால், என்னால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியாது." என்று நான் சொல்லி விட்டேன். கடைசியில், "எங்களுக்கு நீங்கள் அப்படியாகக் குறைத்துத் தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம். முழுப் பணத்தையும் தருகிறோம். நியாயமான முறையில் அதற்குரிய வரியை அரசாங்கத்திற்குக் கொடுத்து விடுகிறோம்." என்று சொல்லி, முழுப் பணத்தையும் கொடுத்து, கிரானைட் கல்லை வாங்கினோம்.

அப்படித்தான் நான் தீர்மானம் எடுக்க, கர்த்தர் எனக்கு உதவி செய்தார். நாம் உண்மையாக இருந்தால்தான், ஜனங்கள் மத்தியில் வேத வசனங்களை தைரியமாகப் பேசி ஜெபிக்க முடியும். ஏமாற்றுகிறவர்களால் தைரியமாகப் பேச முடியாது. நாம் உண்மையாக இருந்தால்தான், நம்முடைய ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுக்க முடியும்.

நீங்கள், உங்கள் வேலையில் உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய வரிப் பணத்தில் உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? கர்த்தர் அதைக் கவனிக்கிறார்! என்பதை மறந்து போகாதீர்கள்.

**"...இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்."** (மத்தேயு 22:21) என்றுதான், இயேசு கிறிஸ்து நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

**அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய வரியை ஒழுங்காகக் கட்டுங்கள்.** ஊழியத்திற்குக் கொடுக்க வேண்டியதை ஊழியத்திற்குக் கொடுங்கள். அப்பொழுதுதான் கர்த்தர் அதை அங்கீகரிப்பார். அரசாங்கத்தை ஏமாற்றி, ஊழியத்திற்குக் கொடுக்கிற பணத்தை கர்த்தர் ஒருபோதும் அங்கீகரிப்பதே இல்லை. ஒருவேளை, ஊழியக்காரர்களுக்குத் தெரியாமல் நீங்கள் கொடுக்கலாம்.

ஆனால், கர்த்தர் அதைக் கவனிக்கிறார் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். **எல்லாவற்றிலும் உண்மை உள்ளவர்களாக இருங்கள்.** உங்கள் பணக் காரியத்தில், உங்கள் வருமானத்தில் உண்மை உள்ளவர்களாக இருங்கள்.

'அநியாய சம்பாத்தியம்!', 'அநியாய வட்டி!' போன்ற காரியங்கள் எல்லாம் கர்த்தருக்கு அருவருப்பானது. ஏமாற்றி சம்பாதிக்கிற பணத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்வதும் இல்லை! அவர்களை அவர் ஆசீர்வதிப்பதும் இல்லை!

"நான் யாரையும் ஏமாற்றுவதில்லை. உண்மையாக இருக்கிறேன்!" என்று சொல்லுங்கள். அதன்படியே நடவுங்கள். உங்கள் தொழிலை, உங்கள் வேலையை, உங்கள் குடும்பத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பார்!

கலப்படம் பண்ணுவது, கள்ளத் தராசு பிடிப்பது, நம்புகிற வாடிக்கையாளர்களை ஏமாற்றுவது போன்ற சாபக் கேடான காரியங்கள்தான், இன்றைக்கு நம்முடைய தேசத்தில் பெரிய பாதிப்புகளை உண்டாக்குகிறது. ஆகவே, **நாம் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.** ஏமாற்றுகிறவர்களாக நாம் இருக்கவே கூடாது.

# உத்தமமாக வாழுங்கள்!

'உத்தமமாய் நடப்பது!' என்றால் என்ன?

**"ஆபிராம் (ஆபிரகாம்) தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு."** (ஆதி. 17:1) என்று சொன்னார்.

ஆபிரகாமினுடைய 75வது வயதில் கர்த்தர் அவருக்குத் தரிசனமாகி, "ஆபிரகாமே, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ. நான் உனக்கு இன்னின்ன ஆசீர்வாதங்களை எல்லாம் தருவேன்." என்று, 7 விதமான ஆசீர்வாதங்களைப் பற்றிச் சொன்னார். ஆபிரகாமும் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொன்னபடியே கர்த்தர் தனக்குக் காண்பித்த தேசத்திற்குப் போனார்.

அதற்குப் பிறகு 24 வருடங்கள் கழித்து, ஆபிரகாமுடைய 99வது வயதில், மறுபடியுமாக கர்த்தர் இறங்கி, "ஆபிரகாமே, நான் உன் தேவனாகிய கர்த்தர், **'...எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு."** (ஆதி. 17:1) என்று சொன்னார்.

பாருங்கள், 24 வருடங்கள் கர்த்தரைப் பின்பற்றி வந்த ஆபிரகாமினிடத்தில், **"எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு."** என்று கர்த்தர் சொன்னார்.

"உத்தமனாயிரு!" என்பதற்கு என்ன அர்த்தம்? **"குற்றமற்றவனாக இரு. அப்பொழுது நான் உன்னை ஆசீர்வதிப்பேன்!"** என்று அர்த்தம். ஆபிரகாமினிடத்தில் கர்த்தர் சொன்ன அந்த வார்த்தை, என் இருதயத்தைத் தொட்டது.

**கர்த்தருடைய கிருபையினால், 40 வருடங்களாக கர்த்தருடைய ஊழியத்தை நான் செய்து வருகிறேன்! இந்த, 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, 40 வருடங்கள் ஆகி விட்டது! நான் என்னை ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து, 42 வருடங்கள் ஆகிறது!**

**இந்த நிலையில், "இந்த 40 வருட ஊழியத்தைப் பார்த்து விட்டேனே!" என்று நான் நினைத்து விட முடியாது. 40 வருடங்கள் கடந்து விட்டது, உண்மைதான்! ஆனால் இன்றைக்கும், "ஆண்டவரே, இவ்வளவு பெரிய ஊழியத்தை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நம்பித் தந்திருக்கிறீரே! நான் அதை மிகுந்த உத்தமமாய், எந்தக் குறையும் இல்லாமல், சுயநலம் இல்லாமல் செய்ய வேண்டுமே!" என்று சொல்லி, நான் தேவ சமூகத்தில் நிற்கும் போதெல்லாம் நடுங்குகிறேன்.

24 வருடங்கள் கடந்து விட்டன! என்றாலும், "ஆபிரகாமே, நீ எனக்குக் கீழ்படிந்து, உன் சொந்த நாட்டை விட்டு விட்டு வந்தது உண்மைதான்! ஆனாலும் எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாக, குற்றமற்றவனாக இரு." என்று கர்த்தர் சொன்னார்.

எனக்கு அன்பானவர்களே, 'கிறிஸ்தவ வாழ்க்கை!' என்பது, வெறும் 'ஜெபம்', 'வேத வாசிப்பு', 'மனம் போனபடி வாழ்கிற வாழ்க்கை' அல்ல. குற்றமற்ற ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். யாரும் கை நீட்டி, நம்மைக் குற்றம் சாட்ட முடியாத ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை! அப்படி வாழ்கிறவர்கள்தான் கர்த்தருடைய பிள்ளைகள்!



"உன் இஷ்டப்படி வாழ். ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஆலயத்திற்கு வந்து உன் காணிக்கையைப் போட்டால் போதும்." என்று சொல்கிறவரல்ல கர்த்தர்.

இஷ்டப்படி வாழ்ந்து கொண்டு, சும்மா மேடையில் ஏறி 'டான்ஸ்' ஆடி விட்டு, 'கர்த்தருடைய கிருபை!' என்று சொல்லிக் கொண்டு, தங்களையே ஏமாற்றிக் கொள்வதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை!

இன்றைக்கு, 'எப்படியும் வாழலாம்! எப்படியும் ஜீவிக்கலாம்!' என்று, கர்த்தருடைய கிருபையை தவறாகப் போதிக்கிற கள்ளப் போதகர்கள் அனேகர் எழும்பி இருக்கிறார்கள். அவர்களுடைய கள்ள உபதேசங்களைக் கேட்டு, ஏமாந்து போகாதீர்கள். கள்ள உபதேசங்கள், கேட்கக் கேட்க நன்றாகத்தான் இருக்கும். ஆனால் கர்த்தர் வரும்போது, கைவிடப் பட்டுப் போவீர்கள்.

**"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக;..."** லேவி. 20:26.

**"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்..."** (1 பேதுரு 1:16) என்று கர்த்தர் சொல்கிறார்.

யாரும் உங்களை கை நீட்டி, குற்றம் சாட்ட முடியாத அளவிற்கு வாழ்கிறீர்களா? என்று, சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒருவேளை நீங்கள், "இந்த உலகத்தில், இந்த விதமான சூழ்நிலையில், எப்படி அந்த அளவிற்கு என்னால் பரிசுத்தமாக வாழ முடியும்?" என்று நினைக்கலாம். அது, கர்த்தருக்குத் தெரியும். நீங்கள் 100க்கு 100 சரியாக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. "நான் 100க்கு 100 சரியாக இருக்கிறேன்!" என்று எந்த மனிதனாலும் சொல்ல முடியாது.

மனிதர்களாகிய நாம் குறைவுள்ளவர்கள்தான்! பெலவீனம் உள்ளவர்கள்தான்! நாம் எல்லோருமே தவறுகிறவர்கள்தான்! ஆனால், அதற்குள்ளாகவே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடாது. ஒருமுறை விழுந்து விட்டீர்களா? பரவாயில்லை! மறுபடியும் எழும்பி நிற்க முயற்சி செய்யுங்கள்.

'அது, சரி!' என்று சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். அதற்கேற்ற வேத வசனங்களைத் தேடி வைத்துக் கொண்டு, உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். முன்னேறிப் போங்கள். சரியாக இருக்க, உத்தமமாக வாழ முயற்சி செய்யுங்கள். அதற்காகப் பிரயாசப்படுங்கள். அதுதான் உத்தமமான ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை. அதைத்தான் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

தன் மனம் போனபடி வாழ்வதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை. உண்மையாக இருக்க, உத்தமமாக வாழ, உங்களை ஒப்புக் கொடுங்கள். நம்முடைய பெலத்தினால் நாம் பரிசுத்தமாக வாழவே முடியாது. உங்களால் முடிந்த அளவிற்குப் பிரயாசப்படுங்கள். உங்களால் முடிந்த அளவிற்கு உத்தமமாக வாழ உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய கிருபைகளை உங்களுக்குத் தருவார்.

மாறாக, அதைக் குறித்த உணர்வே இல்லாமல், இஷ்டப்படி வாழ்ந்தால், கர்த்தர் எப்படி ஜெபத்திற்குப் பதில் கொடுக்க முடியும்?

**"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?"** (யோவான் 8:46) என்று இயேசு கிறிஸ்து சவால் விட்டார்.

அன்றைக்கு, இயேசு கிறிஸ்துக்கு விரோதமாக அனேக மதத் தலைவர்கள் எழும்பினார்கள். அவருக்கு விரோதமாக அனேகப் பொய் சாட்சிகளைத் தேடினார்கள். ஆனால், ஒருவராலும் கை நீட்டி அவரைக் குற்றம் சாட்ட முடியவில்லை. இயேசு கிறிஸ்து, அப்படிப்பட்ட பரிசுத்தமான, உத்தமமான ஒரு வாழ்க்கை வாழ்ந்தார்.

எனக்கு அன்பானவர்களே, நாமும் அப்படிப்பட்ட, குற்றமற்ற ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அவமானத்தைக் கொண்டு வருகிற ஒரு வாழ்க்கை நாம் வாழவே கூடாது. இன்றைக்கு, "ஒரு கிறிஸ்தவரான இவரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஞ்சம் கேட்டார்? கிறிஸ்தவர்களா வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துகிறார்கள்?" என்று இயேசு கிறிஸ்துவை அறியாத அனேக மக்கள் சொல்லக் கேட்கிறோமே! நாம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துகிறதினால், இயேசு கிறிஸ்துவுக்குத்தான் அவமானம்!

அதை விட உங்களுக்குப் பணம் முக்கியமா? வரதட்சணை முக்கியமா? இன்றைக்கு எத்தனை கிறிஸ்தவர்கள் 'ஜாதி' பார்க்கிறார்கள்? அதனால், இயேசு கிறிஸ்துவுக்கு எவ்வளவு பெரிய அவமானம்! அவருக்கு அவமானத்தைக் கொடுக்கிற ஒரு வாழ்க்கை நமக்கு வேண்டவே வேண்டாம். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை நமக்கு அவசியமா? அதை விட ஒரு ஏழையாக இருந்து விட்டுப் போகலாம். "இயேசு கிறிஸ்துவை அவமானப்படுத்துகிற ஒரு வாழ்க்கை நமக்கு அவசியமா?" என்று, சற்று யோசித்துப் பாருங்கள்.

நான் இந்த 40 வருடங்கள் ஊழியத்தின் பாதையில் கடந்து வந்திருந்தாலும், இன்றைக்கு வரைக்கும் தினமும் காலையில் எழும்பி, கர்த்தருக்கு முன்பாக நின்று, "ஆண்டவரே, இன்னும் என்னைப் பரிசுத்தப்படுத்தும். "...பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." (வெளி. 22:11) என்று சொன்னீரே! நான் குறைவுள்ளவன். என்னை இன்னும் பரிசுத்தப்படுத்தும்." என்று சொல்லி, கண்ணீரோடு ஜெபிக்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு இருதயம் நமக்கு வேண்டாமா? ஒரு உணர்வில்லாமல் எப்படி வாழலாம்? "எப்படியும் ஜீவிக்கலாம்! அவர்களைப் பார்....இவர்களைப் பார்...அவர்கள் நன்றாகத்தானே இருக்கிறார்கள்! இவர்கள் நன்றாகத்தானே இருக்கிறார்கள்!" என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களா? நன்றாக இருக்கிறவர்கள் நரகத்திற்குப் போகிறார்களே, அவர்களோடு கூட நீங்களும் நரகத்திற்குப் போகப் போகிறீர்களா? ஆகவே, அப்படிப்பட்ட வாழ்க்கை நமக்கு வேண்டாம். பரிசுத்தமான, உத்தமமான ஒரு வாழ்க்கை வாழ, நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

# நலமானதைச் செய்யுங்கள்!

**"...கர்த்தாவே, நான்... உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான்." 2 இராஜா. 20:3.**

எசேக்கியா இராஜா கர்த்தரை நோக்கி, "ஆண்டவரே, உம்முடைய பார்வைக்கு நலமானவைகளை எல்லாம் நான் செய்தேன். உமக்கு முன்பாக நான் உண்மையாக இருந்தேன். உத்தமமாக நடந்தேன். நான் ஒரு இராஜாவாக இருந்தாலும் கூட, என் விருப்பப்படி எதையும் செய்யவில்லை. என் விருப்பப்படி நான் வாழவில்லை. அதை நினைத்தருளும்." என்று சொல்லி, அழுது ஜெபித்தான்.

எசேக்கியா இராஜா சேவித்த அதே கர்த்தரைப் பின்பற்றுகிற நாம், இன்றைக்கு, "அவரைப் போல கர்த்தருக்குப் பிரியமானவைகளைச் செய்கிறோமா? அவர் விரும்புகிறபடி நாம் வாழ்கிறோமா?" என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

கர்த்தருக்குப்
பிரியமானவைகளைச் செய்கிறோமா?
**அவர் விரும்புகிறபடி நாம் வாழ்கிறோமா?**
**என்று சிந்தித்துப் பாருங்கள்.**

காரணம், கர்த்தராகிய தேவன் நம்மைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவானது, இந்த உலகத்தில் எதுவுமே கிடையாது. இரவும், பகலும் அவர் நம்மைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார். நம்முடைய அந்தரங்கம் எல்லாம் அவருடைய பார்வையில் வெட்ட வெளிச்சமாக இருக்கிறது. அவருடைய பார்வையில் இருந்து நாம் தப்பவே முடியாது. இன்றைக்கு அனேகக் கிறிஸ்தவர்கள், "ஞாயிற்றுக் கிழமை ஆலய ஆராதனைக்கு வரும்போது மட்டும்தான், கர்த்தர் நம்மைப் பார்க்கிறார்." என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இல்லை பிரியமானவர்களே! ஒரு நாளின் **24 மணி நேரமும், கர்த்தருடைய கண்கள் நம் மீது பதிந்திருக்கிறது.** நாம் எங்கே போகிறோம்? எங்கே உட்கார்ந்திருக்கிறோம்? என்ன பேசுகிறோம்? என்ன செய்கிறோம்? என்று, 24 மணி நேரமும் அவர் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவருடைய பார்வைக்கு நாம் தப்பித்துக் கொள்ளவே முடியாது.

ஆகவேதான் எசேக்கியா இராஜா, **"நான் ...உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன்..." (2 இராஜா. 20:3)** என்று சொன்னார்.

"நம்மை கவனித்துக் கொண்டிருக்கிற கர்த்தர் ஒருவர் இருக்கிறார்!" என்பதை மறந்து போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாதீர்கள். ஆகவே, அவருடைய பார்வைக்கு நலமானதை நாம் செய்ய வேண்டும். அவருக்குப் பிரியமான வாழ்க்கை நாம் வாழ வேண்டும்.

நாம் பெலவீனம் உள்ளவர்கள் என்று அவருக்கு நன்றாகவே தெரியும். ஆகவே, அவர் நமக்குக் கிருபை தருவார். அதை நாம் வாஞ்சித்து, அவரிடத்தில் கேட்க வேண்டும்.

ஆகவேதான், "...நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை இல்லை." (யோசுவா 1:5, எபிரெயர் 13:5) என்று கர்த்தர் சொல்கிறார்.



அவர் உங்கள் கூடவேதான் இருக்கிறார்! அவர் உங்கள் வீட்டிற்குள்தான் இருக்கிறார்! நீங்கள் பள்ளிக் கூடம் போனாலோ, அல்லது கல்லூரிக்குப் போனாலோ, உங்கள் கூடவேதான் அவர் வருகிறார். அவருடைய கண் பார்வையில்தான் நாம் இருக்கிறோம். அதை நாம் மறந்து விடக் கூடாது. ஆகவே, நாம் கர்த்தருடைய பார்வைக்கு நலமானவைகளைத்தான் செய்ய வேண்டும்.

கர்த்தருடைய பார்வைக்கு நலமானவைகளை எசேக்கியா இராஜா செய்தபடியினால்தான், அவருடைய அந்த ஜெபத்தைக் கேட்டவுடனே, கர்த்தருடைய உள்ளம் உடைந்தது. அவரால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அப்பொழுது கர்த்தர், ஏற்கெனவே ஏசாயாவின் மூலமாக, தான் சொல்லி அனுப்பிய தன்னுடைய தீர்க்கதரிசனத்தையே மாற்றி, அவருடைய வியாதியைச் சுகமாக்கி, இன்னும் 15 வருடங்களை அவருக்குக் கூட்டிக் கொடுத்தார்.

வெறும் கண்ணீரை மட்டுமே பார்த்து, கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசனத்தை மாற்றவில்லை. கண்ணீர் வடித்த அந்த மனிதன் உண்மை உள்ளவர்! உத்தமர்! கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய்தவர்! ஆகவேதான், அவருடைய கண்ணீர் ஜெபம் கர்த்தருடைய உள்ளத்தையே அசைத்து விட்டது!

எனக்கு அன்பானவர்களே, முதலாவதாக நீங்கள், கர்த்தருக்கு முன்பாக உண்மையாக இருக்க உங்களை ஒப்புக் கொடுங்கள். உத்தமமாக இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற உங்களை ஒப்புக் கொடுங்கள். அவருடைய பார்வைக்கு நலமானதை எல்லாம் செய்ய, உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு, நீங்கள் ஜெபிக்கும் போதெல்லாம் கர்த்தர் உங்கள் ஜெபத்தை மிகக் கவனமாகக் கேட்டு, பதில் கொடுப்பார்.

ஒரு சமயம், நான் ஒரு ஆலயத்தில் தேவ செய்தியைக் கொடுப்பதற்காகப் போயிருந்தேன். ஆராதனை முடிந்ததும், நூற்றுக்கணக்கானோர் என்னிடத்தில் ஜெபிக்கும்படியாக வந்து, முழங்கால்படியிட்டார்கள். அந்த சமயத்தில், என்னால் யாரிடத்திலும் நிதானமாகப் பேசி ஜெபிக்க முடியவில்லை. நான் ஒவ்வொருவர் தலையின் மீதும் கை வைத்து, வேகமாக ஜெபித்துக் கொண்டே வந்தேன்.

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு தாயாரின் தலையில் நான் என் கையை வைத்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் என்னோடு கூட இடைப்பட்டு, அந்தத் தாயாருடைய உள்ளத்திற்குள் இருந்த பாரங்கள், குடும்பத்திற்குள் இருந்த பிரச்சனைகள், அவர்களுடைய தேவைகள் மட்டுமல்லாமல், இனிமேல் அவர்களுடைய வீட்டில் நடக்கப் போகிற காரியங்கள் எல்லாவற்றையும் குறித்துச் சொன்னார். நானும் ஒரு 5 நிமிடங்கள் அவர்களுக்காக பாரத்தோடு ஜெபித்தேன். அப்பொழுது அந்தத் தாயார் ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தார்கள். அவர்களும் தன்னுடைய நிலைமையைப் பற்றி என்னிடத்தில் ஒன்றுமே பேசிக் கொள்ளவும் இல்லை.

அன்றைக்கு எல்லோருக்காகவும் ஜெபித்து முடித்து விட்டு, நான் தங்கியிருந்த அறைக்குள் வந்து, "ஆண்டவரே, அங்கிருந்த எத்தனையோ பேருக்கு நான் கை வைத்து ஜெபித்தேன். எல்லோருக்கும் ஒரே ஒரு தொடுதல்தான். ஆனால் ஒரே ஒரு தாயாரைக் குறித்து மட்டும் நீர் என்னோடு பேசி, அவர்களை விசேஷமாக ஆசீர்வதித்து அனுப்பினீரே! அதன் இரகசியம்தான் என்ன?" என்று கேட்டேன்.

அப்பொழுது கர்த்தர், "எல்லோரும் என்னை நேசிக்கிறார்கள், ஜெபிக்கிறார்கள், விசுவாசிக்கிறார்கள், உண்மைதான்! ஆகவேதான், நீ அவர்கள் மீது கை வைத்து ஜெபிக்கிறபோது நான் அவர்களை ஆசீர்வதிக்கிறேன். அதே சமயத்தில், அந்தத் தாயாரைக் குறித்து, 'என்ன காரியம்?' என்று கேட்டால், அவள் எனக்குப் பிரியமானதைச் செய்கிறவள்! அவளுக்கு இருந்த அத்தனை பிரச்சனைகளைக் குறித்தும் நான் உனக்கு வெளிப்படுத்தினேனே! தனக்கு அவ்வளவு பிரச்சனைகள் இருந்தும், தனக்காக ஒருநாள் கூட அவள் என்னிடத்தில் ஜெபித்ததே கிடையாது." என்று சொன்னார்.

"என்ன ஆண்டவரே சொல்கிறீர்?" என்று நான் கர்த்தரிடத்தில் கேட்டபோது, "ஆம்! அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுது ஜெபித்தாலும், மற்றவர்களுக்காக, அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காகத்தான் அழுது ஜெபிப்பாள். தனக்கென்று அவள் எதையுமே என்னிடத்தில் கேட்பதில்லை. அதனால்தான் அவள் மீது எனக்குப் பிரியம்." என்று சொன்னார்.

**"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்.**

**நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.**

**நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது." (1 தீமோத்தேயு 2:1–3)** என்பதாக, பரி. பவுல் மூலமாக, கர்த்தர் நமக்கு ஆலோசனை கொடுக்கிறார்.

**ஆகவே, எல்லா மனிதருக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.** நம்முடைய தேசத்தில் அமைதியும், சமாதானமும் உண்டாகி, நல்லொழுக்கத்தோடு, சகல ஜனங்களும் கலகமில்லாத ஒரு வாழ்க்கை வாழும்படியாக, அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். அது நம்முடைய கர்த்தருக்கு மிகவும் பிரியமானது.

மற்றவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். ஒரு சின்னக் காரியம்தான்! ஆனால் நாம் அதைச் செய்கிறோமா?

எனக்கு அன்பானவர்களே, **நம்முடைய தேசத்தைப் பாருங்கள்! தேசத்தில் எவ்வளவு அநியாயங்கள் நடந்து கொண்டிருக்கிறது? சொந்த நாட்டையை சூறையாடுகிற கொள்ளைக்காரர்கள் தேசத்தில் சுற்றித் திரிகிறார்களே! மக்கள் எவ்வளவாகப் பாதிக்கப்பட்டு, வீதிகளிலே நின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள்! தேசத்தில் ஒரு நாளைக்கு, குறைந்தது 100 பெண்களாவது கற்பழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்காக நீங்கள் ஜெபிக்க மாட்டீர்களா?**

கர்த்தர் மிகுந்த பாரமுள்ளவராக இருக்கிறார்! "என்னை அறிந்திருக்கிற நீங்கள், என்னுடைய வசனத்தின்படி நடப்பதே இல்லையே! அப்புறம் ஏன் உங்களை நான் ஆசீர்வதிக்க வேண்டும்?" என்று, கர்த்தர் இன்றைக்கு நம்மைப் பார்த்துக் கேட்கிறார்.

எத்தனை நாட்களுக்குத்தான் நாம் சுயநலமாக வாழப் போகிறோம்? எத்தனை நாட்களுக்குத்தான் சுய நலமாகவே நாம் ஜெபித்துக் கொண்டிருக்கப் போகிறோம்? கர்த்தருடைய பார்வைக்கு நலமானதை நாம் செய்கிறோமா?

என்றைக்காவது ஒருநாள், "ஆண்டவரே, பாவத்திலே அழிந்து கொண்டிருக்கிற என் ஜனம் இரட்சிக்கப்பட வேண்டுமே! **எங்கள் தேசத்தில், ஒரு வருடத்தில், குறைந்தது 2 லட்சம் சிறு பிள்ளைகள் காணாமல் போகிறார்களே! அவர்கள் எங்கே போகிறார்கள்? என்ன ஆகிறார்கள்? அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கிற பெற்றோருடைய நிலைமை என்ன?"** என்று நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

இயேசு கிறிஸ்துவின் உள்ளம் துக்கப்படுகிறது! சிறு குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போய், பாலியல் பலாத்காரம் பண்ணுகிற, மிருகங்களைக் காட்டிலும் மிகக் கேவலமாக நடக்கிற காரியங்கள், நம்முடைய தேசத்தில் பெருகி விட்டன!



காரணம் என்ன தெரியுமா? **நீங்களும், நானும் ஜெபிக்காதபடியில்தான்!** நீங்களும், நானும் சுயநலவாதிகளாக மாறி விட்டபடியினால்தான், தேசத்தில் இப்படிப்பட்ட கொடிய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கர்த்தர் மிகுந்த பாரத்தோடு, "எனக்குப் பிரியமான ஜெபம் செய்வதற்கு யாருமில்லையே!" என்று அங்கலாய்க்கிறார். நாம் ஜெபிக்க வேண்டிய அளவு ஜெபிக்கவில்லை. திருச்சபைகள் ஜெபிக்கவில்லை.

**நீங்களும், நானும் ஜெபிக்கா விட்டால், இந்த தேசத்திற்கு என்ன விமோச்சனம் இருக்கிறது?** நீங்களும், நானும் இந்த தேசத்திற்காக மன்றாடா விட்டால், இந்த தேசத்திற்கு என்ன எதிர்காலம் இருக்கிறது? அவருடைய பார்வைக்கு நலமானபடி ஜெபம் செய்கிறோமா?

தினமும் எவ்வளவு நேரம் ஜெபிக்கிறீர்கள்? அந்த ஜெபத்திலே, உங்களுக்காக எவ்வளவு நேரம் ஜெபிக்கிறீர்கள்? திருச்சபைகளுக்காக எவ்வளவு நேரம் ஜெபிக்கிறீர்கள்? தேசத்திற்காக எவ்வளவு நேரம் ஜெபிக்கிறீர்கள்? உங்கள் ஜெபத்தைக் குறித்து, ஒரு கணக்குப் போட்டுப் பாருங்கள்.

2 மணி நேர ஆலய ஆராதனையில் என்ன நடக்கிறது? அறிவிப்புக் கொடுக்கிற அளவிற்குக் கூட சில திருச்சபைகளிலே ஜெபம் செய்வதில்லை. கர்த்தர் துக்கப்படுகிறார்!

நம்முடைய பிறந்த நாளுக்கு, பெயரை வாசித்து ஜெபிக்கிறோம்! நம்முடைய கல்யாண நாளுக்கு பெயரை வாசித்து ஜெபிக்கிறோம்! நல்லதுதான். நான் அதை 'தவறு' என்று சொல்லவில்லை. அதே சமயத்தில், **நம்முடைய தேசத்தில் எத்தனையோ சிறு குழந்தைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செத்துக் கொண்டிருக்கிறார்களே! எத்தனையோ வாலிபப் பெண் பிள்ளைகள், தங்கள் கற்பை இழந்து கொண்டிருக்கிறார்களே! எத்தனையோ சிறு குழந்தைகள் காணாமல் போகிறார்களே!** இப்படிப்பட்ட துக்ககரமான செய்திகள், தினந்தோறும் செய்தித்தாள்களில் வந்து கொண்டிருக்கிறதே!

இதற்காக, ஒரே ஒரு நிமிடமாவது உங்கள் திருச்சபைகளிலே ஜெபிக்கிறீர்களா? சற்று யோசித்துப் பாருங்கள். தேசத்தைப் பாழாக்குகிற இப்படிப்பட்ட பொல்லாத ஆவிகளை யாரால் அடக்கிப் போட முடியும்? நம்முடைய முழங்கால் ஜெபத்தினால் மட்டுமே முடியும்.

கர்த்தர் எதை எல்லாம் சொல்லவில்லையோ, அதற்கெல்லாம் ஜெபம் நடக்கிறது. ஆனால், அவர் எதற்கெல்லாம் ஜெபிக்கச் சொன்னாரோ, அதற்காக ஜெபிக்க ஆளில்லை. நம்முடைய **இந்த தேசம் பாழாய் போகக் காரணமே, "கர்த்தருடைய பிள்ளை!" என்று சொல்லிக் கொள்கிற நாம்தான்!** அதனால்தான் பிசாசானவன் தேசத்தில் தலை விரித்து ஆடுகிறான்.

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்காவது உங்களை ஒப்புக் கொடுங்கள். "ஆண்டவரே, இனிமேல் நான் உண்மை உள்ளவனாக, உத்தமமாக நடப்பேன்." என்று சொல்லி, கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்டு, அவருடைய சித்தத்தை நிறைவேற்ற உங்களை ஒப்புக் கொடுங்கள். இனிமேலும் நீங்கள் ஜெபிக்கவில்லை என்றால், சிறு குழந்தைகளை கர்த்தர் எழுப்புவார்!

சமீபத்தில் ஒரு சகோதரர், தன்னுடைய 3½ வயதுக் குழந்தையோடு என்னை சந்தித்து ஜெபித்து விட்டுப் போகும்படியாக வந்தார். நான் அவர்களைப் பார்த்துப் பேசி விட்டுப் புறப்படும்போது, அந்தச் சிறு குழந்தை, "அங்கிள், ஜெபிக்க வேண்டும்." என்று சொன்னாள். உடனே நான், "எதற்காக ஜெபிக்க வேண்டும்?" என்று கேட்டேன்.

அதற்கு அவள், "இந்தியாவுக்காக ஜெபிக்க வேண்டும்!" என்று சொன்னாள். எனக்குப் புரியவில்லை. மறுபடியும் குனிந்து அவளிடத்தில் கேட்டபோது, அதே பதிலைத்தான் சொன்னாள். நான் அந்த சகோதரனிடத்தில், "இந்த சின்னப் பிள்ளைக்கு எப்படி இந்தியாவுக்காக ஜெபிக்க வேண்டும் என்று தெரியும்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "நீங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பேசுகிறதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கேட்டு, அதேபோல ஜெபம் பண்ணுவாள்." என்று சொன்னார்.

ஆகவே எனக்கு அன்பானவர்களே, இனி நீங்கள் ஜெபிக்கா விட்டால், சிறு பிள்ளைகளை கர்த்தர் ஜெபிக்க வைத்து, காரியங்களை நிறைவேற்றி, தேசத்தில் எழுப்புதலை உண்டாக்கி விடுவார்! உங்களை நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

**கர்த்தருடைய**
**சித்தத்தை நிறைவேற்ற**
**உங்களை ஒப்புக் கொடுங்கள்.**

பிரியமானவர்களே, நீங்கள் உண்மையும், உத்தமுமாக நடந்து, கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்தால், அவர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு, உடனே அற்புதம் செய்வார்.

இதுவரை நீங்கள் எப்படி வாழ்ந்திருந்தாலும் சரி! இன்றுமுதல், உண்மையாக, உத்தமமாக வாழ உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்!

எல்லாக் காரியத்திலும் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய, உங்களை ஒப்புக் கொடுங்கள்! அற்புதங்களைக் காண்பீர்கள்!

அற்புதங்களின் தேவனே, உமக்கு ஸ்தோத்திரம்!

ஜெபத்தைக் கேட்கிறவரே, உமக்கு ஸ்தோத்திரம்!



எல்லாக் காரியத்திலும் உண்மையுள்ளவனா(ளா)க இருக்க, என்னை அர்ப்பணிக்கிறேன்!

உண்மையில்லாமல் நடந்து கொண்ட என் பாவங்களை எனக்கு மன்னியும்!

உத்தமமாக உம்மைப் பின்பற்ற, என்னை ஒப்புக் கொடுக்கிறேன்!

உம்முடைய நாமத்திற்கு அவமானம் வராதபடி, குற்றமற்ற வாழ்க்கை வாழ எனக்கு உதவி செய்யும்!

எப்பொழுதும் உமது பார்வைக்கு நலமானதைச் செய்ய, எனக்குக் கிருபை தாரும்!

"உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன், நான் உன்னை குணமாக்குவேன்." என்று வாக்குக் கொடுத்தவரே, என்னை குணமாக்கும்! எனக்கு விடுதலை தாரும்! எனக்கு ஒரு அற்புதம் செய்யும்!

இன்று நீர் என் விண்ணப்பத்தைக் கேட்டு, எனக்கு அற்புதம் செய்கிறீர் என்று உம்மை நான் விசுவாசிக்கிறேன்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நான் வேண்டிக் கொண்ட காரியத்தில் அற்புதம் நடப்பதாக!

"பெற்றுக் கொண்டேன்!" என்று விசுவாசிக்கிறேன்! உம்மிடத்தில் இருந்து என் அற்புதத்தை நான் எதிர்பார்க்கிறேன்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவும், பகலும் 24 மணி நேரமும் ஜெபிக்க,

# தேவனுடைய கூடாரத்தில் ஜெபக் கோபுரம்!




"...உன் மதில்களின்மேல் பகல்முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன்." (ஏசாயா 62:6) என்று அனேக ஆண்டுகளுக்கு முன்பாக, **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்திற்கு கர்த்தர் வாக்குக் கொடுத்தார்.

அதாவது, "இரவும், பகலும் ஜெபிக்கிற ஜாமக்காரரைத் தருவேன்!" என்றார். அதன்படி, நம் இந்தியா தேசத்திற்காக ஜெபிக்க, **'ஜாமக்காரன் ஜெபம்'** ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்த ஜாமக்காரன் ஜெபம் நடைபெறுகிறது. தினமும் சுமார் 30 பேர் கூடி வந்து, காலை 9:00 மணிமுதல், மாலை 3:00 மணிவரை தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறார்கள். இரவு 9:00 மணிமுதல், அதிகாலை 3:00 மணிவரை சகோதரர்கள் மட்டும் கூடி வந்து ஜெபிக்கிறார்கள்.

தேவனுடைய கூடாரம் கட்டப்பட்டவுடன், இரவும், பகலும் ஜெபிக்கிற மக்கள் கூடி வருவார்கள்.

தேவனுடைய கூடாரத்தின் முன் பகுதியில், ஒரு **ஜெபக் கோபுரம்** கட்டப்பட இருக்கிறது. இந்த ஜெபக் கோபுரத்தில், 24 மணி நேரமும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். ஜெபக் கோபுரத்தைக் கட்டுகிற பணியை சீக்கிரத்தில் துவக்க இருக்கிறோம். இதற்காக **ஜெபியுங்கள்.**

கர்த்தர் ஏவினால், இந்த **ஜெபக் கோபுரக் கட்டுமானப் பணியில் நீங்களும் பங்கு பெறலாம்.** இதற்கென்று நீங்கள் அனுப்புகிற காணிக்கை முழுவதும், ஜெபக் கோபுரக் கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும்.

இந்த ஜெபக் கோபுரம் **கட்டுமானப் பணியில், உங்கள் பங்கும் இருக்க வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார். நாம் யாவரும் சேர்ந்து, இதைக் கட்டி எழுப்ப வேண்டும்! கர்த்தர் உங்களை **ஏவுகிறபடி உங்கள் பங்குகளை அனுப்பலாம்!**

இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். - உங்கள் சகோதரன்.

### காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA.**
***(Ph: 011 293 0152, 071 437 1111)***


## வாங்கி விட்டீர்களா?

**2018ம் ஆண்டிற்கான வாக்குத்தத்தப் பாடலோடு கூடிய பாடல் ACD**

# புதிதாக்கும் தேவன்! (Vol-25)



நேரில் பெற ரூபா 100/-

தபாலில் பெற ரூபா 150/-

எமது தலைமை மற்றும் எல்லா கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

*Online Purchase: www.jesusredeemsonline.com, www.jesusredeems.com*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவும், நானும்!



*Jesus & Myself!*

கடந்த (2018) பிப்ரவரி மாத இதழில், "ஆரம்பக் காலத்தில், சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களோடு இணைந்து, நீங்கள் அனேக ஊழியங்களைச் செய்திருக்கிறீர்கள். பின் நாட்களில், "பலருக்கு ஆசீர்வாதமாக சகோதரர் அவர்களை கர்த்தர் எடுத்துப் பயன்படுத்துவார்!" என்று அன்றைக்கு நீங்கள் நினைத்தது உண்டா?" என்று Pr. தைரியநாதன் அவர்களிடத்தில் கேட்டபோது..., கடைசியாக,

"...என்ன சாப்பாடு கிடைத்தாலும், அதை நாங்கள் சந்தோஷமாக சாப்பிடுவோம். சில நாட்களில், 'ரசம்-சோறு' மட்டும்தான் இருக்கும். சில வேளைகளில் நடந்தும், சைக்கிளிலும் ஊழியத்திற்குப் போயிருக்கிறோம். விடுமுறை நாட்களில் சகோதரர் அவர்களுடைய வீட்டிற்கு நாங்கள் குடும்பமாகச் சென்றிருக்கிறோம். நாங்கள் எவ்வளவு நாட்கள் அங்கே தங்கி இருந்தாலும், சகோதரர் அவர்களுடைய தாயார் எங்களை மிகவும் நன்றாக கவனித்துக் கொள்வார்கள். அந்த நாட்களில், நாங்கள் இருவரும் நாலுமாவடியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்திருக்கிறோம்." என்று சொன்னதாக வாசித்திருப்பீர்கள்.

**இதோ, அதன் தொடர்ச்சி...**

"உங்கள் வாழ்க்கையிலே நடந்த அற்புதங்களைப் பற்றிச் சொன்னீர்கள்! உங்களுக்குள்ளே ஆத்துமாக்களைக் குறித்த தணியாத ஒரு தாகம் இருப்பதையும் பார்க்க முடிகிறது! ஊழியமும் செய்ய ஆரம்பித்து விட்டீர்கள்! எப்படி சின்ன சின்னதாக ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்கள்? 'இயேசு விடுவிக்கிறார்' என்கிற இந்த ஊழியம் எப்பொழுது துவங்கியது?" என்று, நமது சகோதரர் அவர்களிடத்தில் கேட்டபோது...

என்னை நான் ஊழியத்திற்கு அர்ப்பணித்து, **'வளத்தி'** என்கிற ஒரு கிராமத்தில் தங்கியிருந்து ஊழியம் செய்ய ஆரம்பித்த கால கட்டத்தில்தான், கர்த்தர் என்னை உருவாக்கினார். அந்த நாட்களில், நானும், **Pr. தைரியநாதன்** அவர்களுமாக அங்குள்ள வனாந்தரப் பகுதிகளில் அடிக்கடி போய் ஜெபிப்பதுண்டு. அவர்கள் ஒரு பக்கமாகப் போய் ஜெபிப்பார்கள். நான் வேறொரு பக்கமாகப் போய் ஜெபம் பண்ணுவேன்.

ஒருநாள், நான் அங்குள்ள ஒரு மலைப் பாறையில் முழங்கால்படியிட்டு, "ஆண்டவரே, என்னைக் குறித்து என்ன திட்டம் வைத்திருக்கிறீர்?" என்று கேட்டு, என்னுடைய எதிர்கால ஊழியத்திற்காக ஜெபம் செய்ய ஆரம்பித்தேன்.

அப்படியாக நான் ஜெபம் செய்து கொண்டிருக்கும்போது, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டுத் தொங்குகிறதைப் போன்ற ஒரு காட்சியை, கர்த்தர் ஒரு தரிசனமாக எனக்குக் காண்பித்தார். அப்படிப்பட்ட ஒரு காட்சியை, முதன்முதலாக நான் அங்குதான் பார்த்தேன்!

இரத்தம் வடிய வடிய, இயேசு கிறிஸ்து சிலுவையிலே தொங்குகிற காட்சியை கர்த்தர் எனக்குக் காண்பித்தார். அப்பொழுது நான், "ஆண்டவரே, இந்த மாதிரியான ஒரு காட்சியை எனக்குக் காண்பிக்கிறீரே! எதற்காக என்று எனக்குப் புரியவில்லையே!" என்று கர்த்தரிடத்தில் கேட்டபோது, "சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை நீ பிரசங்கம் பண்ண வேண்டும். அந்த சிலுவையினால் உண்டாகிற மீட்பையும், ஆசீர்வாதத்தையும் நீ ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும். அதுதான் முக்கியமான செய்தியாக இருக்க வேண்டும்." என்று, கர்த்தருடைய ஆவியானவர் மிகத் தெளிவாக என்னிடத்தில் பேசினார்.

அப்பொழுது, எதைக் குறித்து அறிவிக்க வேண்டுமென்பதை கர்த்தர் எனக்குத் தெளிவுபடுத்திய காரியத்திற்காக நான் அவரை ஸ்தோத்திரம் பண்ணினேன்.

அதற்குப் பிறகு, நான் தொடர்ந்து ஜெபம் செய்து கொண்டே வருகிற காலத்தில், "கர்த்தர் என்னை எங்கெல்லாம் அனுப்புகிறாரோ, அங்கெல்லாம் போய் ஊழியத்தைச் செய்து விட்டு வரலாம்." என்றுதான் முதலில் என்னை அர்ப்பணித்திருந்தேன்.

அந்த சமயத்தில், 'ஒரு மிஷனெரியாகப் போய் ஊழியம் செய்யலாம்!' என்று நினைத்து, சில மிஷனெரி ஸ்தாபனங்களோடு தொடர்பு கொண்டு, அவைகளின் மூலமாக வட இந்தியாவிற்குப் போய் ஊழியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்காக, சில முயற்சிகளையும் செய்தேன். ஆனால், அவைகள் எதுவுமே எனக்கு வாய்க்கவில்லை.

நான் சென்னை – 'பாடி'யில் இருந்த சமயத்தில் ஒருநாள், என் மீது அதிக அன்பு வைத்திருந்த எங்களுடைய திருச்சபைப் போதகர், Rev. **சௌந்தர்ராஜன்** அவர்கள், என்னை எப்படியாவது ஒரு குருவானவராக ஆக்கி விட வேண்டும் என்று விரும்பி, அதற்குரிய விண்ணப்பப் படிவத்தையும் வாங்கிக் கொண்டு வந்து, அதை நிரப்பிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எனக்கு ஒரு தகப்பனைப் போல இருந்தபடியினால், என்னால் அதை மறுக்க முடியவில்லை. ஆனால், அதை நிரப்புகிற காரியத்தில், குருவானவருக்காகப் படிப்பதற்கேற்ற வயது, அன்றைக்கு எனக்குப் போதாமல் இருந்தது. இப்படியாக, அதுவும் தடைப்பட்டுப் போய் விட்டது.

அதற்குப் பிறகு நான் ஜெபம் பண்ணும் போதும், தெருக்களில் நின்று நான் கைப் பிரதி கொடுக்கும் போதும், தெருப் பிரசங்கம் பண்ணும் போதும், கர்த்தருடைய கிருபை அதிலே அதிகமாக வெளிப்பட்டது.



அந்த சமயங்களில், கர்த்தராகிய தேவன், என்னுடைய அன்றைய சூழ்நிலையின் மூலமாகவும், வேத வசனங்களின் மூலமாகவும் என்னோடு இடைப்பட்டு, "ஒரு சுவிசேஷகன்!' என்பவன், இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை அறிவிக்கிறவன்!" என்பதை மிகத் தெளிவாக எனக்குக் காண்பித்தார்.

அதற்குப் பிறகு, "ஊழியத்தை எங்கிருந்து செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்?" என்கிற அடுத்த கேள்விகள் என் உள்ளத்திற்குள் எழுந்தன. வேதாகமக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிற காலத்திலேயே, விடுமுறை நாட்களில் மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து, மலை வாசி மக்கள் மத்தியில் போய் ஊழியம் செய்வோம்.

அந்த நாட்களில், Pr. **தைரியநாதன்** அவர்களும் எங்களோடு கூட இருந்தார்கள். நாங்கள் குழுவாகச் சென்று, ஏற்காடு மலைப் பகுதியில் இருந்த எங்களுடைய வேதாகமக் கல்லூரி நண்பன், சகோ. **பென்னட் வால்டர்** அவர்களுடைய எஸ்டேட்டில் தங்கியிருந்து கொண்டு, கிராமம் கிராமமாகச் சென்று மலை வாழ் மக்கள் மத்தியில் போய் ஊழியம் செய்து இருக்கிறோம்.

நாங்கள் தங்கியிருந்த இடம், அதிக உயரமான ஒரு இடத்தில் இருந்தது. அந்த இடம், மேகங்களுக்கும் மேலே இருப்பதைப் போல இருக்கும். அங்குள்ள உயரமான பாறையில் போய் உட்கார்ந்து பார்த்தால், நாங்கள் இருக்கிற இடத்திற்கும் கீழாக மேகங்கள் இருக்கும்! அவ்வளவு உயரமான மலைப் பகுதி அது. அப்படிப்பட்ட இயற்கையான ஒரு சூழ்நிலையில் போய் ஜெபிப்பது, எனக்கு மிகவும் பிடிக்கும்.

அதாவது, வனாந்தரப் பகுதியில், மலைப் பகுதியில், தோட்டங்களுக்குள் போய் ஜெபிப்பதை நான் அதிகமாக விரும்புவேன். அந்த நாட்களில், அந்த ஏற்காடு மலைப் பகுதியில் உட்கார்ந்து, கர்த்தரை நோக்கி, என்னுடைய எதிர்கால ஊழியத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். "ஆண்டவரே, நான் என்ன மாதிரியான ஊழியத்தைச் செய்ய வேண்டும். நான் எப்படி ஊழியம் செய்ய வேண்டும்?" என்று ஜெபத்தில் கேட்டபோது, கர்த்தர் என்னோடு இடைப்பட்டு, "மகனே, உனக்கு ஒரு விடுதலையின் ஊழியத்தைத் தருகிறேன்.

அதாவது, பாவத்திலும், வியாதியிலும், சாபத்திலும், பிசாசின் கட்டுகளிலும் கட்டுண்ட மக்களை விடுதலையாக்கும்படியான ஒரு ஊழியத்தை நிறைவேற்றுவதற்காகவே நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்!" என்று சொல்லி, **'இயேசு விடுவிக்கிறார்'** என்கிற ஊழியத்திற்கான பெயரை, அன்றைக்கு நான் அந்த ஏற்காடு மலையில் வைத்து ஜெபித்துக் கொண்டு இருக்கும் போதுதான், கர்த்தர் எனக்கு தெளிவாக வெளிப்படுத்தினார்.

அதை வைத்து நான் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருந்தேன். ஆனால், "எங்கு போய் ஊழியம் செய்வது? எப்பொழுது ஊழியத்தைத் தொடங்குவது?" என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தை நான் தொடங்குவதற்கு முன்பாக, 4 வருடங்கள் என்னை உருவாக்கினார்.


1974 முதல், 1978ம் வருடம் வரை, அனேக விதமான பாடுகளுக்குள்ளும், உபத்திரவத்திற்குள்ளுமாக நடத்தி, கர்த்தர் என்னை உருவாக்கினார். அதாவது, ஒரு **50 பைசாவுக்கு மர வள்ளிக் கிழங்கை மட்டுமே வாங்கிச் சாப்பிட்டு விட்டு இருந்த நாட்கள் உண்டு!** சில வேளைகளில், **அது கூட இல்லாமல் இருந்த நாட்களும் உண்டு!** அந்த அளவிற்கு கர்த்தர் என்னை நடத்தினார்.

ஆரம்பக் காலத்தில் **எனக்கு ஒரே ஒரு 'Pants'தான் இருந்தது.** தினமும் காலையில் அதை தோய்த்துப் போடுவேன். மாலையில் அதை 'Iron' செய்து போட்டுக் கொண்டு, ஊழியத்திற்குப் போவேன்.

அதுவும், 'Iron' செய்ய 'Iron Box' கூட இருக்காது. ஒரு செம்பில் சூடான தண்ணீரை ஊற்றி, அதை வைத்துத்தான் 'Iron' பண்ணுவேன். கர்த்தர் என்னை அப்படியாகப் பழக்குவித்தார். பணத்தின் மீது எனக்கு எந்த விதமான நாட்டமும் போய் விடாதபடிக்கு, முற்றிலும் அவரையே சார்ந்து, எதற்கும் நான் ஆயத்தமாக இருக்கத் தக்கதாக, கர்த்தர் என்னை பல விதங்களிலே உருவாக்கினார். அதாவது எந்த சூழ்நிலையிலும் வாழ்ந்திருக்கவும், தாழ்ந்திருக்கவும் தெரிந்திருக்கும்படியாகத்தான் கர்த்தர் என்னை 4 வருடங்கள் உருவாக்கினார். அவ்வப்போது, விடுமுறை நாட்களில் என் சொந்த ஊரான நாலுமாவடிக்குப் போய், ஒரு மாதம் அங்கே தங்கியிருந்து நான் ஊழியம் செய்து விட்டு வருகிறதினால், எங்கள் திருச்சபையில் உள்ளவர்களுக்கும், ஊரில் இருக்கிறவர்களுக்கும் என்னைப் பற்றிக் கொஞ்சம் தெரியும்.

- தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்!

எசேக்கியா இராஜாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, அவருடைய மரணப் படுக்கையை கர்த்தர் மாற்றினார். இன்றும் நம் ஜெபத்தைக் கேட்டு, அற்புதம் செய்ய இயேசு கிறிஸ்து ஆயத்தமாக இருக்கிறார். விசுவாசத்தோடு நாம் சேர்ந்து ஜெபிக்கத்தான், திறப்பின் வாசல் ஜெபத்தை கர்த்தர் ஏற்படுத்தினார். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு, கர்த்தர் செய்த அற்புதங்களைப் பாருங்கள்:

## தற்கொலை எண்ணம் மாறியது!

என் வாழ்க்கையில் இருந்த பல விதமான பிரச்சனைகளின் நிமித்தம், **"தற்கொலை செய்து மரித்து விட வேண்டும்."** என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.



இந்நிலையில், மிகுந்த மன பாரத்தோடு திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டேன். கடைசி ஜெப வேளையில், **சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்** அவர்களிடம் என் பிரச்சனைகளை எல்லாம் சொல்லி, ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் ஜெபித்தபோது, எனக்குள் இருந்த **தற்கொலை எண்ணம் மாறி**, கர்த்தர் மேல் விசுவாசம் கொண்டு, மிகவும் **சந்தோஷமாக இருக்கிறேன்**. **– மகேஸ்வரி, கன்னம்பாளையம்.**

## பெயர் சொல்லி அழைத்து, விடுதலை!

சுமார் 15 வருடங்களாக பிசாசின் **போராட்டத்தினால்** மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன். ஜெபித்துக் கொண்டிருந்தால், அந்த ஆவி என்னைத் தாக்காது. சோர்ந்து போய் ஜெபிப்பதை விட்டு விட்டால், அந்த ஆவி **என்னை அலைக்கழிக்கும்**. அதிலிருந்து ஒரு முழுமையான விடுதலை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டேன்.



**அடிக்கடி விபத்துகளில் சிக்கி,** குடும்பமாக மிகவும் **வேதனைப்பட்டோம்.**

ஜெப வேளையில் நமது சகோதரர் அவர்கள், ஆவியானவரின் ஏவுதலினால் **என்னைப் பெயர் சொல்லி அழைத்து**, "உனக்கு இருக்கிற கட்டுகளில் இருந்து, கர்த்தர் உன்னை இப்பொழுதே விடுதலையாக்குகிறார்!" என்று சொல்லி ஜெபித்தார்கள்.

அப்பொழுது, ஒரு தேவ வல்லமை என் மீது மிகுந்த பலமாக இறங்கியது. அந்நேரமே அந்தப் பிசாசின் போராட்டத்திலிருந்து எனக்கு **முழுமையான ஒரு விடுதலை கிடைத்தது. – மகாலெட்சுமி, சென்னை.**

## பக்கவாதம் சுகமானது!

**ஒன்றரை வருடங்களாக பக்கவாதத்தினால்** பாதிக்கப்பட்டு, என் சரீரத்தின் **இடது பக்கம் முழுவதுமாக செயலிழந்து** போயிற்று. **நடக்கவே முடியாமல்** ஆகி விட்டது.



டாக்டர்கள், **"மூளையின் ஒரு பகுதியில் இரத்தம் உறைந்து போய் இருக்கிறது. நீங்கள் சுகமாவது கடினம்."** என்று சொல்லி விட்டார்கள்.

திறப்பின் வாசல் ஜெபத்தில் எனக்காக ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, டாக்டர்களே மிகவும் ஆச்சரியப்படும்படியாக எனக்கு **நல்ல சுகத்தைக் கொடுத்து, என்னை நன்றாக நடக்கவும்** பண்ணினார். **– டேனியேல் சந்திரன், சிதம்பரம்.**

## கண்ணீரைக் களிப்பாக்கினார்!

ஒரு வருடத்திற்கும் மேலாக, என் **இடது கால் முழுவதும்** எப்பொழுதும் ஒரு பயங்கரமான காந்தல் இருந்தது. எவ்வளவோ சிகிச்சைகளைச் செய்தும், சுகம் கிடைக்கவே இல்லை. **வேதனை தாங்க முடியாமல் அழுது** கொண்டிருப்பேன்.



ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டதை உணர்ந்தேன். அந்நேரம் முதல், **பூரண சுகத்தைப் பெற்று**, நிம்மதியாக இருக்கிறேன். **– தங்கப்பாண்டி தாசன், விருதுநகர்.**

## வேதனையை மாற்றினார்!

என் **இடது மார்புப் பகுதியில் ஒரு ஆபரேஷன் செய்ததின்** நிமித்தமாக, உண்டான **அதிகமான**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலியினால் 7 மாதங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன். என் சரீரத்தின் இடது பக்கம் முழுவதுமாக வலிக்கும். என்னால் எந்த வேலையும் செய்ய முடியாது. ஜெப வேளையில், ஆவியானவர் நமது சகோதரர் அவர்கள் மூலமாக என்னைப் பெயர் சொல்லி அழைத்து, கர்த்தர் எனக்குப் பூரண சுகம் தருவதாக வாக்களித்தபோது, என் மீது தேவ வல்லமை பலமாக இறங்கியது.

அப்பொழுது என் சரீரத்தில் ஒரு மாற்றம் உண்டாவதை உணர்ந்தேன். அந்நேரமே வேதனை மாறி, பூரண சுகத்தோடு இருக்கிறேன். - செல்வமணி.

## 17 வருட அசுத்த ஆவி வெளியேறியது!

சுமார் 17 வருடங்களாக அசுத்த ஆவியின் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டிருந்தேன். எந்த இடம் என்று கூடப் பார்க்காமல், திடீர் திடீரென்று அது என்னை பயங்கரமாக அலைக்கழிக்கும்.



ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என் மீது பலமாக இறங்கியபோது, ஒரு பாம்பின் தலை நசுக்கப் படுவதைப்போல ஒரு தரிசனத்தைப் பார்த்தேன். அப்பொழுது, எனக்குள் இருந்த அசுத்த ஆவி என்னை விட்டு வெளியேறிப் போனது. - தங்கபுஷ்பம், ரெட்டியார்பட்டி.

## விசுவாசத்தைக் கனப்படுத்தி, சுகம்!

என் இடது மார்புப் பகுதியில் இருந்த அதிகமான வலியினால், 3 மாதங்களாக கஷ்டப்பட்டேன். வலி அதிகமாகிக் கொண்டேதான் இருந்தது.



நான் ஒரு நர்ஸாக இருந்த போதிலும், டாக்டரிடம் காண்பிக்க எனக்கு மனமில்லை. நான் கர்த்தர் மீது வைத்திருந்த விசுவாசத்தினால், என் கணவர் சொல்லியும் நான் மறுத்து விட்டேன். "நான் திறப்பின் வாசல் ஜெபத்திற்குப் போய் விட்டு வருகிறேன். கர்த்தர் எனக்கு சுகம் தருவார்." என்று அவரிடத்தில் சொல்லி இருந்தேன்.

ஜெப வேளையில், ஆவியானவர் நமது சகோதரர் அவர்கள் மூலமாக என் பெயரைச் சொல்லி அழைத்து, என் பிரச்சனையையும் வெளிப்படுத்திச் சொல்லி, என் வேதனையை கர்த்தர் மாற்றிப் போடுவதாக வாக்களித்தார்.

அப்பொழுது கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டதை உணர்ந்தேன். அந்நேரமே அந்த வலி முற்றிலுமாக நீங்கி, நல்ல சுகத்தைப் பெற்றுக் கொண்டேன். - தர்ஷிணி.

## கேட்டேன், பெற்றுக் கொண்டேன்!

கடந்த 2008ம் வருடம் எனக்குத் திருமணமாகி, 2010ல் கர்ப்பம் தரித்தேன். ஆனால், அந்தக் குழந்தை கருச் சிதைவு (Abortion) ஆகி விட்டது. மிகுந்த வேதனையோடு, 2011 நவம்பர் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டேன்.



ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபத்தை ஏறெடுத்தபோது, நானும் அவர்களோடு இணைந்து ஒரு பொருத்தனையோடு ஜெபித்தேன்.

மட்டுமல்ல, "2017ம் வருடம் சொந்தமாக ஒரு புதிய வீடு கட்டி குடியேற வேண்டும்." என்றும் கர்த்தரிடத்தில் ஒரு விண்ணப்பத்தையும் வைத்தேன்.

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, என் கர்ப்பத்தை ஆசீர்வதித்து, அழகான ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கவும், நான் வேண்டிக் கொண்டபடியே சொந்தமாக வீடு கட்டி, அதில் குடியேறுவதற்கும் கிருபை செய்தார். - பாபினி அனில், கொல்லங்கோடு.

இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்! உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 - மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம்.

நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள். ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம். - உங்கள் சகோதரன்.

நாலுமாவடி
திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்: 2018**

**மார்ச் 31**

(கடைசி சனிக்கிழமை)

Address: Standing in the Gap Prayer,
Nalumavadi-628 211,
Thoothukudi Dist., India.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பகுதி!

# புத்தியுள்ள ஸ்திரீ!



சிறப்புச் செய்தி:
**சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.**

கடந்த (2018) பிப்ரவரி மாத இதழில், கடைசியாக, "ஒருவேளை நீங்கள் ஒரு வாலிப சகோதரியாக இருக்கலாம்! உங்கள் வாழ்க்கையை பரிசுத்தத்திற்கென்று ஒப்புக் கொடுத்திருக்கிறீர்களா? பாவ அசுத்தங்களைச் செய்து கொண்டு, கர்த்தருடைய பிள்ளையைப் போல் நடித்துக் கொண்டிருந்தால், கர்த்தருடைய கண்கள் உங்களைக் காண்கிறது என்பதை மறந்து போகாதீர்கள்." என்பதாக வாசித்து முடித்திருப்பீர்கள்!

இதோ, **அதன் தொடர்ச்சியை** வாசியுங்கள்...

கர்த்தர் உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறவராக இருக்கிறார். ஆகவே கர்த்தரைக் குறித்த பயத்தோடும், நடுக்கத்தோடும் வாழ உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். பாவ அசுத்தங்களை உதறித் தள்ளி விட்டு, உங்கள் வாழ்க்கையை கர்த்தருக்கு ஒப்புக் கொடுங்கள். பாவத்தை விட்டு நீங்கள் மனந்திரும்பும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பிரகாசிக்கச் செய்வார். **(எபேசியர் 5:14).**

தூக்கமும், கன நித்திரையும், நீங்கள் கர்த்தருக்காக எழுந்து பிரகாசிக்க முடியாதபடி உங்களைத் தடை செய்கிற சத்துருவின் வல்லமையான ஆயுதங்களாகும். நீங்கள் அதை எதிர்த்து ஜெபிக்கும்போது, அந்த கன நித்திரையின் ஆவி உங்களை விட்டு எடுபட்டுப் போகும். எனக்கு அன்பானவர்களே, **ஆவிக்குரிய நித்திரை ஆபத்தானது. (ரோமர் 11:8).**

அது மட்டுமல்ல, காலத்தின் அருமையை நாம் அறிந்து வாழ வேண்டும். இல்லையென்றால், கண்ணீர் வடிக்க வேண்டியதிருக்கும். ஒருவேளை, இனி உங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு காலம் கொடுக்கப்படாமல் கூட இருக்கலாம். ஆகவே, காலத்தின் அருமையை நாம் உணர்ந்து வாழ வேண்டும். "இந்த நாட்கள், நாம் நித்திரையை விட்டு எழுந்திருக்கத் தக்க வேளையாக இருக்கிறது!" என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

ஒரு ஏழைப் படகோட்டி, ஆற்றின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு ஜனங்களை தன் படகில் அழைத்துக் கொண்டு போய் வருவான். அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து, அவன் தன்னுடைய குடும்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான். அவனுடைய குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோஷமாகத்தான் போய் கொண்டிருந்தது.

ஒருநாள் யாருமே வரவில்லை. ஆகவே அவன், துடுப்பை அந்த ஆற்றங்கரையில் போட்டு விட்டு, தன்னுடைய படகை அந்த ஆற்றின் ஓரத்தில் உள்ள ஒரு செடியில் சும்மா கட்டி வைத்து விட்டு, அந்தப் படகில் படுத்து அப்படியே தூங்கி விட்டான். அந்த சமயத்தில் கொஞ்சம் பலமாக காற்று அடித்தபடியினால், கயிறு அவிழ்ந்து, அந்தக் படகு ஆற்றுத் தண்ணீர் போகிற போக்கில் போக ஆரம்பித்து விட்டது.

அந்த நேரத்தில் தற்செயலாக அந்தப் பக்கமாக வந்த சிலர் அந்தக் காட்சியைப் பார்த்து, பதட்டமடைந்தவர்களாக, எவ்வளவோ சத்தம் போட்டு அவனைக் கூப்பிட்டுப் பார்த்தார்கள்.

> **பாவத்தை விட்டு நீங்கள் மனந்திரும்பும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பிரகாசிக்கச் செய்வார்.**

ஆனால் அவன் கன நித்திரையில் இருந்தபடியினால், அந்த சத்தம் அவனுடைய காதுகளில் விழவேயில்லை. கடைசியில் அந்தப் படகு ஒரு நீர் வீழ்ச்சியில் சிக்கி, அவனும் மரித்துப் போனான்!

இப்படித்தான் இன்றைக்கு, அனேக தேவ பிள்ளைகளை நிர்விசாரமும், கன நித்திரையின் ஆவியும் பற்றிப் பிடித்திருக்கிறது. அனேகக் கிறிஸ்தவர்கள் கூட, பாவப் பழக்கங்களினாலும், சிற்றின்ப மோகத்தினாலும் நிறைந்தவர்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

எனக்கு அன்பானவர்களே, பெண்களாகிய நாம் இன்றைக்கு எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? நாம் பாவத்திலும், சிற்றின்ப மோகத்திலும் மூழ்கிப் போன நிலைமையில் இருக்கிறோமா? சற்று நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம்.

இப்படித்தான், நோவாவின் நாட்களில் ஜலப் பிரளயம் வந்தபோது, நிர்விசாரமாக இருந்த ஜனங்களை எல்லாம் வெள்ளம் வாரிக் கொண்டு போனது. நோவா ஒரு நீதிமான்தான்! நல்ல ஒரு தேவனுடைய மனிதன்தான்! தேவனோடு நடந்தவர்தான் இந்த நோவா!

ஆனால் ஒரு சமயம், "**அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்.**" (ஆதி. 9:21) என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

அதன் நிமித்தமாக, அவருடைய இளைய மகனான **கானான்** சபிக்கப்பட்டான். அந்த நோவாவைப் போல இன்றைக்கு நீங்களும் ஏதோ ஒரு சிற்றின்பப் பாவத்தில் மூழ்கிக் கிடக்கிறீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அன்பானவர்களே, எழுந்திருங்கள்! ஆவிக்குரிய வாழ்க்கையில் நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தால், உங்களையும், உங்களுடைய சந்ததியையும் கர்த்தர் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?

இன்றைக்கு, "நானும் ஒரு கிறிஸ்தவள்!" என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோமே! கர்த்தர் விரும்புகிறபடி நாம் வாழ்கிறோமா? தினமும் தேவ சமூகத்தில் அமர்ந்து, வேதாகமத்தை கிரமமாக வாசித்து, தியானித்து ஜெபிக்கிறோமா? நாம் கர்த்தருக்கு முன்பாக, அவருடைய உண்மையான பிள்ளையாக நடந்து கொள்கிறோமா? இன்றைக்கு அவருடைய சத்தத்தை நம்மால் கேட்க முடிகிறதா? நம்முடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைச் சேர்த்து வைக்கிறோமா? அல்லது சாபத்தை சேர்த்து வைக்கிறோமா? இன்றைக்கு நாம் எப்படிப்பட்ட பெண்களாக இருக்கிறோம்? என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். கர்த்தருக்கு முன்பாக நம்மை சீர் தூக்கிப் பார்த்து, காரியங்களை எல்லாம் சரிப்படுத்திக் கொள்வோமாக.

கர்த்தருடைய தாசனாகிய **தாவீது**, **"என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்."** (சங்கீதம் 13:3) என்று கதறினார்.

அதேபோல நீங்களும், "ஆண்டவரே, என் கண்களைத் தெளிவாக்கும். தூங்குகிற என்னை உயிர்ப்பியும். மரித்தோரை விட்டு என்னை எழுப்பும். என் பாவ வாழ்க்கையில் இருந்து என்னை மீட்டெடும்." என்று கர்த்தரிடத்தில் கெஞ்சி மன்றாடுங்கள்.

**"அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை (கர்த்தர்) உயிர்ப்பித்தார்."** (எபேசியர் 2:1) என்று வேதாகமம் சொல்கிறது. அக்கிரமங்களிலும், பாவங்களிலும் இருக்கிற எவரையும் உயிர்ப்பிக்க, கர்த்தர் வல்லமை உள்ளவராக இருக்கிறார்.

ஆகவே, நீங்கள் துன்மார்க்கருடைய ஆலோசனைக்கு செவி கொடுக்காமலும், பாவிகளுடைய வழிகளில் நிற்காமலும், பரியாசக்காரர் உட்காருகிற இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாக இருக்க வேண்டும். "அவருடைய வேதத்தை இரவும், பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்!" என்று, கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. **(சங்கீதம் 1:1-2).**

நாம் கர்த்தருக்காகப் பிரகாசிக்க வேண்டுமானால், நம்முடைய பாவ வாழ்க்கையை விட்டு நாம் எழும்பியே ஆக வேண்டும்.

பரி. பவுல், 'துரோவா' என்கிற பட்டணத்தில் இருந்த ஒரு மேல் வீட்டில் வைத்து, கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, **'ஐத்திகு'** என்கிற ஒரு வாலிபன், அங்கிருந்த ஒரு ஜன்னலில் உட்கார்ந்து, அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்.



வெகு நேரமாக பரி. பவுல் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்த அந்த சமயத்தில், அந்த வாலிபன் தன்னையும் அறியாமல் தூங்கிப் போய், உயரமான அந்த இடத்தில் இருந்து கீழே விழுந்து, மரித்துப் போய் விட்டான். அப்பொழுது பரி. பவுல் அவன் மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு, அவனுக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவனை மறுபடியுமாக உயிரோடு எழுப்பினார்." என்பதாக, பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. **(அப். 20:8-12).**

எனக்கு அன்பானவர்களே, பரி. பவுல் அந்த வாலிபனோடு ஐக்கியமாகாமல் இருந்திருப்பாரானால், அந்த வாலிபனுடைய நிலைமை என்னவாக இருந்திருக்கும்? மரித்துப் போய், ஒருவேளை பாதாளத்தில் அல்லவா அவன் பங்கடைந்திருப்பான்! அந்த வாலிபன் பரி. பவுலோடு கூட பங்கடையாமல் இருந்திருந்தால், ஒருவேளை அவன் நரகத்திற்குப் பாத்திரவானாக இருந்திருப்பான்!

எனக்கு அன்பானவர்களே, நாம் பாவத்தை விட்டு மனந்திரும்பி இருக்க வேண்டும். மரித்தோரை விட்டு நாம் எழுந்திருக்க வேண்டும். நம்முடைய ஐக்கியம், கர்த்தருக்குப் பிரியமில்லாத மனிதர்களோடு இருக்கவே கூடாது.

**"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது."** (1 யோவான் 1:3) என்று பரி. **யோவான்** சொல்கிறார்.

இந்த வேத வசனத்தின்படியே, நம்முடைய ஐக்கியம், பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்க வேண்டும். அதில் நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**'சிம்சோன்'** கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மனிதன்தான்! இஸ்ரவேலரை பெலிஸ்தியரின் கையில் இருந்து விடுவிக்கும்படியாக, ஒரு விசேஷித்த அபிஷேகத்தை கர்த்தர் அவருக்குக் கொடுத்திருந்தார். ஆனால், கர்த்தருக்காக எழுந்து பிரகாசிக்க வேண்டிய சிம்சோனோ, பாவத்திற்குள்ளாக விழுந்து போனார்!

தன்னை விபச்சாரப் பாவத்திற்கும், கன நித்திரையின் ஆவிக்கும் ஒப்புக் கொடுத்து விட்டார். 'தெலீலாள்' என்கிற ஒரு வேசியின் மடியில் அவர் படுத்திருந்தபோது, 'அவருடைய பலம் எதினால் வருகிறது?' என்பதை, அவருடைய எதிரிகள் கேட்டறிந்து, அவருடைய தலைமுடியை அவர்கள் சிரைத்தபோது, அவருக்குள் இருந்த பலம், அவரை அறியாமலேயே அவரை விட்டு எடுபட்டுப் போனது. அதன் நிமித்தமாக, சிம்சோனின் வாழ்க்கை அவருடைய பாதி வயதிலேயே முடிந்து போனது.

எனக்கு அன்பான சகோதரியே, இன்றைக்கு ஒருவேளை நீங்களும் சிம்சோனைப் போல, அருவருப்பான பாவமான காரியங்களைச் செய்து கொண்டு, துணிகரமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்களா?

- தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிறப்புப் பிரார்த்தனைகள்



Pr. ஸ்ரீகாந்த்



### கொழும்பு – திறப்பின் வாசல் ஜெபத்தில்

# கருத்தாய் ஜெபித்தால், ஆசீர்வாதம்!

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைதோறும் இலங்கை தேசத்தின் எழுப்புதலுக்காகவும் மக்களின் இரட்சிப்பிற்காகவும் திறப்பின் வாசல் உபவாச ஜெபம் நடை பெற்று வருகிறது.

பிப்ரவரி மாதம் 3ம் தேதி, காலி முக வீதியிலுள்ள கிறிஸ்து நாதர் ஆலய சபா மண்டபத்தில் வைத்து நடை பெற்ற திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில் சுமார் 180 தேவப் பிள்ளைகளும் 10 போதகர்களும் கலந்து கொண்டு ஊக்கமாக ஜெபித்தனர்.

பாடல் மற்றும் ஆராதனை வேளையை பாஸ்டர். ஸ்ரீகாந்த் அவர்கள் நடத்த, ஜெப வேளையை சகோ. சுரேஷ் அவர்கள் பொறுப்பெடுத்து, தங்கள் தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும் சபையின் மறுமலர்ச்சிக்காகவும் கண்ணீரோடு ஜெபங்கள் ஏறெடுத்தார்கள். பின்னர் முந்திய திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்ட தேவப் பிள்ளைகள் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

பாஸ்டர். ஸ்ரீகாந்த் அவர்கள் "எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை." (யாக். 5:17) என்ற தேவ வசனத்தின் அடிப்படையில் தேவ செய்தினை கொடுக்கும்போது வந்திருந்த தேவப்பிள்ளைகள் கருத்தாய் ஜெபித்தால், தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்பார் என்று விசுவாசித்தோடு ஜெபித்து கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இக்கூடுகையின் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை தோறும் திரளான தேவப் பிள்ளைகள் கலந்து கொண்டு தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காய் ஜெபித்து வருகின்றனர்.

நீங்களும் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்த்தர் செய்த அற்புதங்களில் சில...

### விண்ணப்பத்தை கேட்டார்!



எனது மகனின் க.பொ.த உயர்தர பரீட்சையில் திறமையாக சித்தியடைய வேண்டுமென திறப்பின் வாசல் ஜெபத்தில் ஜெப விண்ணப்பம் எழுதிக்கொடுத்து ஜெபம் செய்து விட்டுப் போனேன்.

அதே போன்று மகன் திறமையாக சித்தியடைய தேவன் கிருபை செய்தார்.

**- நேசராணி**, கொழும்பு.

### தடைகளை மாற்றினார்!



நாங்கள் வாழும் சுற்றுப்புறத்தில் வாழுவோர் மிகவும் சமுதாயத்தை சீர்குலைக்கும் காரியங்களில் ஈடுபட்டுவந்தோடு, நான் திருமணமாகி மூன்று வருடங்களாகியும் வெளிநாட்டிலுள்ள என்னுடைய கணவரிடம் செல்வதற்கு அனேக தடைகளும் காணப்பட்டது.

திறப்பின் வாசல் ஜெபத்திலும் வத்தளை கெத்சமனே ஜெப மையத்திலும் கலந்து கொண்டு ஜெபம் செய்த வேளை தேவன் மேற்குறிப்பிட்ட இரண்டு காரியங்களிலும் வெற்றியைத் தந்து ஆசீர்வதித்தார். **- நிரஞ்சலா**, கொழும்பு.

## கொழும்பில்

இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2018

**ஏப்ரல் 7**

(சனிக்கிழமை)

நேரம்: காலை 9:00 - மதியம் 2:00.

இடம்:

**Christ Church Hall,**
**Galle Face,**
(Near the Ramada Hotel.)

தேவ செய்தியும், ஜெபமும்:

**'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்.**


தேசத்திற்காக ஜெபிக்கவும், ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: *57/36A, P.O. 108,*
*Thimbirigasyaya Road, Hendala,*
*Wattala, SRILANKA. Ph: 011-2930 152.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# REVIVAL PRAYER TOUR 2018!

## எழுப்புதல் ஜெப சுற்றுலா!

# இஸ்ரேல் மற்றும் வேதாகம தேசங்களில்!

## இலங்கை மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

**எருசலேமில்** | **12 மணி நேர உபவாச ஜெபம்!**

**கெத்செமனே தோட்டத்தில், கலிலேயா கடற்கரையில், கர்மேல் பர்வதத்தில், 2 அல்லது 3 மணி நேர விசேஷித்த எழுப்புதல் ஜெப நேரங்கள்!**

## எழுப்புதல் ஜெப சுற்றுலா!

யோர்தான், இஸ்ரேல், பாலஸ்தீனம், எகிப்து.

பதிவு கட்டணம் **₹ 2,30,000/-**

**மே 1 முதல், மே 12வரை.**

எழுப்புதல் ஜெப சுற்றுலாவில் கலந்து கொள்கிறவர்கள், எகிப்து பிரமிடுகள், நைல் நதி, செங்கடல், சீனாய் மலை மற்றும் விசேஷித்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

**யூத மக்கள், பாலஸ்தீன மக்களின் இரட்சிப்பிற்காக, சபைகளில் காணப்படுகிற சடங்காச்சாரங்கள் நீங்கி, எழுப்புதல் உண்டாக, ஜெபிக்க வாருங்கள்!**





தேவ செய்தியும், ஜெபமும்:

**சகோ. மோகன் சி. லாசரஸ்,**

**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்.**

- சிதேக்கியா குகையில் ஜெபம்.
- இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த இடத்தில் திருவிருந்து ஆராதனை,
- **பார்க்க இருக்கும் விசேஷித்த இடங்கள்:** எருசலேம், பெத்லகேம், எரிகோ, நாசரேத், கானா, யோப்பா, கலிலேயா மற்றும் இன்னும் பார்த்திராத அனேக புதிய இடங்கள்.
- ஒலிவ மலை, சீயோன் மலை, மோரியா மலை, கல்வாரி மலை, கர்மேல் மலை, நேபோ மலை மற்றும் பல மலைகள்!
- கலிலேயா கடல், சவக் கடல், மத்திய தரைக் கடல், யோர்தான் நதி... மற்றும் இயேசு கிறிஸ்து நடந்து சென்ற மற்றும் அற்புதங்களைச் செய்த இடங்களைப் பார்க்கலாம்!

**முன் பதிவு செய்து, முழு கட்டணத்தையும் செலுத்துபவர்கள் மட்டுமே, அழைத்துச் செல்லப்படுவார்கள்.**

### முக்கிய அறிவிப்புகள்:

- 12 மணி நேர உபவாச ஜெபம், 2 அல்லது 3 மணி நேர ஜெபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால், சிறு குழந்தைகள், கை குழந்தைகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மேலும், 69 முதல், 75 வயது வரையுள்ள நபர்கள், தங்கள் உதவிக்கு ஒரு நபரை அழைத்து வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு இன்சூரன்ஸ் கட்டணமாக, ரூபா 3,000/- தனியாக வசூலிக்கப்படும்.
- இந்த இஸ்ரேல் எழுப்புதல் ஜெப சுற்றுலாவில் பங்கு பெற விரும்புகிறவர்கள், தங்களுடைய அலுவலக விடுமுறைக்கு விண்ணப்பிக்கும்பொழுது, வருகிற (2018) மே 1 முதல், 15ம் தேதிவரை விண்ணப்பித்துக் கொள்ளவும்.
- ஜெப சுற்றுலாக்கான சுற்றுப் பயணம், யோர்தான் தேசம் அம்மான் நகரத்தில் தொடங்கி, எகிப்து தேசத்தில் முடிவடையும்.

- **இஸ்ரேல், யோர்தான்** மற்றும் **எகிப்து விசா,** தங்குவதற்கான 3 நட்சத்திர ஹோட்டல், மூன்று வேளை உணவு, பிரயாணத்திற்கு A/C பஸ், சுற்றுலா இடங்களுக்கான நுழைவுக் கட்டணம் மற்றும் **எல்லா செலவுகளும் இதில் அடக்கம்.** விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள, உடனே கீழ்கண்ட தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுங்கள்.

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. Ph: +94 710 690 900**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில்

இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்

நாள்: பிரதி செவ்வாய் கிழமைதோறும்
நேரம்: காலை 9:30 மணிமுதல்,
மாலை 2:00 மணிவரை.

செய்தி: 'இயேசு விடுவிக்கிறார்'
குழுவினர் மற்றும் போதகர்கள்.

முகவரி: 'இயேசு விடுவிக்கிறார்'
**கெத்செமனே ஜெப மையம்**
இல.29, சுபமங்கள திருமண மண்டபம்
முதல் தளம், ஹங்கிசன் தெரு, திருகோணமலை.
போன்: 011-2930 152, 071 437 1111.

தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்க,
தேவ ஜனங்களே,



## குடும்பமாக வாருங்கள்!

வியாபாரம் மற்றும் தொழில் செய்கிறவர்களுக்காக, நாலுமாவடியில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்!

நாள்: 2018 **மார்ச் 17** (3வது சனிக்கிழமை).

நேரம்: காலை 9:00 - மாலை 3:00 .

இடம்: **தேவனுடைய கூடாரம்,**
நாலுமாவடி.

தேவ ஆலோசனைகளும், ஜெபங்களும்:
**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. A. அப்பாத்துரை.**

தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட பல தொழிலதிபர்களின் சாட்சிகள்!

- கடந்த வருடங்களில் நடந்த ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் வியாபாரிகள் மற்றும் தொழில் செய்கிற சுமார் 10,000க்கும் அதிகமானவர்கள் பங்கு பெற்று, தேவாசீர்வாதங்களைப் பெற்றுச் சென்றுள்ளார்கள்.
- உங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தை எல்லாம் ஒருநாள் ஒதுக்கி வைத்து விட்டு, **தேவ சமூகத்திற்கு வாருங்கள்!**
- அந்த நாளில் உங்களுக்காக, உங்கள் தொழில் மற்றும் வியாபாரங்களின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கப்படும்.
- இந்தக் கூட்டத்திற்கு வர இயலாதவர்கள், உங்கள் ஜெப விண்ணப்பங்களை எழுதி, வருகிற (2018) மார்ச் 17ம் தேதிக்குள் எங்கள் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.





**தொழில் முனைவோரே வாருங்கள்,**
**தேவ ஆசீர்வாதங்களை பெறுங்கள்!**

தொடர்பு : ஆசீர்வாத உபவாச ஜெபம், இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி - 628 211, தூத்துக்குடி மாவட்டம்.
☎: 04639 - 22 00 22. Email: info@jesusredeems.com Visit: www.jesusredeems.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலையில்

'இயேசு விடுவிக்கிறார்'

# கெத்செமனே ஜெப மையம்!

ஒவ்வொரு செவ்வாய்கிழமையும்

காலை 9:30 - மதியம் 2:00 மணிவரை.

## திறப்பின் வாசல் ஜெபம்

## தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

*Contact: 011-2930 152.*



# MOBILE APPLICATION!

ANDROID APP ON Google play

Available on the App Store

*You can now download the* **'Jesus Redeems'** *Application from* **APPLE** *appstore &* **ANDROID** *Google Playstore.*

## கிளிநொச்சி

இயேசு விடுவிக்கிறார்




முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.

## இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!**
(புதன்கிழமைதோறும்)
12:00 P.M. - 3:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
9:00 A.M. - 12:00 Noon

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்!
(ஞாயிற்றுக்கிழமைதோறும்)
3:00 P.M. - 4:00 P.M.

**அற்புத விடுதலை பிரார்த்தனை!**
(ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை)
5:00 P.M. - 7:00 P.M.

**முழு இரவு ஜெபம்**
(போயா நாளின் முந்தைய தினம்)
இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

## தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

வத்தளையில் தனியாக... குழுவாக... சபையாக... ஜெபிக்கலாம்...

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.



### நடைபெறும் ஊழிய விபரங்கள்

**பெண்கள் ஜெபம்!**
(வியாழக்கிழமைதோறும்)
10:00 A.M. - 1:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
10:00 A.M. - 1:00 P.M.

**குடும்ப ஆசீர்வாத கூடுகை!**
(ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று)
10:00 A.M. - 1:00 P.M.

**மாணவர்கள் கூடுகை!**
(2வது, 3வது வெள்ளிக்கிழமைதோறும்)
4:00 P.M. - 5:00 P.M.

சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: 57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.
உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

## காணிக்கை அனுப்புவோர்
### கவனத்திற்கு...



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு!**

நீங்கள் காணிக்கை அனுப்பிய பின்னர் நீங்கள் செலுத்தியதற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைபேசியின் மூலமாக தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.

A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680
Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo -02. Swift Code : HBLILKLXXXX.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## *தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!*



**ஏஞ்சல் டி.வியில்** தினமும் காலை 7:30 - 8:00, இரவு 11:30-12:00.

**செவ்வாய்கிழமை தோறும் காலை 10:00 - 10:30.**

**சனிக்கிழமை தோறும் மதியம் 2:30 - 3:00.**

**சுவர்க டி.வியில்** ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல... ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

LBN The Cable TV Network

**Dialog TVயில்** *(God Channel)* ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின்

தேவ செய்திகளைக் கேட்டு,

*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA
Registered in the Department of Posts of Sri Lanka under QD/100/News/2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org